காசு



# பூச்சரம்

www.thamizham.net - Free E Books No TM 14717

Phone : 440278

Leading Dealers in
South-West Madras

IN BOOKS
ON ART
SCIENCE
COMMERCE
ENGINEERING
ETC.,

Visit :

VISWANATH & CO.,

*BOOK SELLERS*

31, Ranganathan Stree[t]
(Opp : Mambalam Railw[ay] Station.)

MADRAS-17.

தமிழக அளவில் மாணவர்களால், மாணவர்களுக்காக
நடத்தப்படும் ஒரே இலட்சிய திங்களிதழ்.

# "பூச்செண்டு"

தனிப்பிரதி : 30 காசு ஆண்டு சந்தா : ரூ. 4/-

செண்டு : 2 ஜூலை 1969 பூ : 3

## உள்ளே......


* நிலவில் அடியெடுக்கும் முதல் மனிதர் ! 6
* மலேசியா சென்று விட்டுவந்த மாணவர் என்ன சொல்கிறார்? 8
* அப்போலோ பதினொன்றில் நான் பயணம் செய்தால். 9
* அஞ்சல் பெட்டி 520-விமர்சனம் 11
* பூச்செண்டு-திங்களுக்கு ஒரு கதை 13
* கண்டக்டரைச் சந்தியுங்கள் ! 17
* குறிக்கோளைக் கொன்று விடாதே. 20
* பெயர் வையுங்கள் பார்ப்போம் ! 23
* தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழியா ? 29
* நிலவில் இறங்கியதும் நடக்கப் போவது என்ன ? 31
* தென்றல் வீசும். 37
* மாண்புள்ள மனிதர் மகாலிங்கம். 46


www.thamizham.net - Free E Books No TM 14717

எல்லா விவரங்களுக்கும் தொடர்பு கொள்ள ஒரே முகவரி :

ஆசிரியர் குழு,
"பூச்செண்டு"
19, நௌரோசி வீதி,
சென்னை-31.

## —ஆசிரியர் குழு—

[பதிப்பாசிரியர் : பேராசிரியர். திரு. சு. இராசேந்திரன், எம். ஏ.]

### பொறுப்பாசிரியர்கள் :

திரு. இ. ஜே. சுந்தர், பி.எஸ்ஸி.
திரு. வில்லியம் பெர்னாண்டஸ், சி.டி. (ஏ. எம். ஐ. இ.)
திரு. ஈ. எஸ். மெர்வின், (III பி. ஏ.) கிறிஸ்துவக் கல்லூரி.
திரு. ந. ஆ. செயவேலன், (IV எம். பி., பி. எஸ்.) சென்னை மருத்துவக் கல்லூரி.

### துணையாசிரியர்கள் :

திரு. அ. மா. சீ. செயினுல்லாபுதீன், (III. பி. ஏ.) பச்சையப்பன் கல்லூரி.

திரு. இரா. வெங்கடரமணி, (III பி. எஸ்ஸி.) இலயோலா கல்லூரி.

---

### செயற்குழு உறுப்பினர்கள்

திரு. வி. வே. மாலன், (III) பட்ட பார்மசி, மதுரை மருத்துவக் கல்லூரி.

திரு. பழ. சிங்காரவேலு, (I பி.ஏ.) பச்சையப்பன் கல்லூரி, காஞ்சிபுரம்.

திரு. பார்த்தசாரதி, ஜெயின் கல்லூரி, சென்னை.

திரு. தேவகுமார், (III பி.எஸ்ஸி.) மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி

திரு. இருதயதாசன், (III பி.எஸ்ஸி) இந்து கல்லூரி, நாகர்கோயில்

திரு. அன்டோமச்சாது, (III பி.ஏ.) வ.உ.சி. கல்லூரி, தூத்துக்குடி

திரு. வே. இரமணன், (III பி.காம்) வ.உ.சி. கல்லூரி, தூத்துக்குடி

திரு. எம். எஸ். இராமச்சந்திரன், (II பி.ஏ.) கிறிஸ்துவக்கல்லூரி, தாம்பரம்.

திரு. ந. தி. சடாச்சரம், (III பி.ஏ.) அரசினர் கலைக்கல்லூரி, சென்னை.

திரு. அர. கல்யாணராமன், (III பி.ஏ.) விவேகானந்தா கல்லூரி, சென்னை

திரு. தணிகாசலம், (II எம். பி., பி.எஸ்.) சென்னை மருத்துவக் கல்லூரி.

திரு. இளங்கோ ஆ. இரா. (II பி எஸ்ஸி) பெரியார் கல்லூரி திருச்சி

திரு. பொ. இரத்தினம். (III பி.காம்) நேஷனல் கல்லூரி, திருச்சி

❖ ❖ ❖

செல்வி. ஆனந்தி, (II பி.எஸ்ஸி( எஸ். ஐ. இ. டி. கல்லூரி, சென்னை.

செல்வி. பி. வி. அருணா, (I பி. ஏ.) அரசினர் மகளிர் கல்லூரி, சென்னை.

செல்வி. கருப்பாயி, (III பி.ஏ.) மீனாட்சி கல்லூரி, மதுரை.

---

உறுப்பினர்கள் இல்லாத கல்லூரிகளில் ஆர்வமுள்ள மாணவர்களை அழைக்கிறோம்.

www.thamizham.net - Free E Books No TM 14717



# கல்லூரித் தேர்தல்கள்.

கல்லூரிகள் எல்லாம் திறக்கப்பட்டு விட்டன. மாணவர்களிடையே பல்வேறு பட்ட உணர்ச்சி யொலிகள்! கல்லூரியில் பயில இடம் கிடைக்கவில்லையே என்ற ஒலிகளும், தாம் வேண்டிய பிரிவுகள் கிடைக்கவில்லையே என்ற ஏமாற்றத்தின் ஒலிகளும் இன்னும் காதுகளில் ரீங்காரித்துக் கொண்டிருக்கின்றன.

இதற்கிடையில்...

இன்னும் ஒரு பேரொலி எழுந்து அடங்க வேண்டியுள்ளது. ஆமாம்—கல்லூரிகளில் நடக்கவிருக்கும் தேர்தல் ஒலிகள் தாம்! கல்லூரிகளில் எல்லாம் தேர்தல் வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் நாம் பயந்தது போலவே இந்த ஆண்டும் மாணவர்கள் என்ற பற்றோ, தோழமை உணர்ச்சியோ, சமய ஒற்றுமையோ கிஞ்சித்தும் இல்லை. வண்ணக் கொடிகளின் சார்பில் போட்டியிடும் தேசீயத் தோழர்களும் கழகத் தோழர்களும் வரிந்து கட்டிக் கொண்டு வேலை செய்யும் நிகழ்ச்சிகள் நாம் ஆண்டு தோறும் கண்டு வரும் துயர அனுபவங்களாகும்.

இந்த உணர்ச்சிகளுக்கு முத்தாய்ப்பு வைப்பது போன்று சென்ற ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டும் நடந்த நிகழ்ச்சிகள் இன்னும் நம் நினைவில் நிழலாடுகின்றன. இந்த நிழல் ஆண்டு தோறும் தன்னுடைய சுய உருவை மாணவர் முன் காட்டிக் கொண்டே வருகின்றது. அது இந்த ஆண்டும் தொடர்வதில், தன்னுடைய சுய உருவைக் காட்டுவதில் வியப்பில்லை. சில பல தனித்த நாளிதழ்கள் தத்தம் ஆதரவு பெற்றவர்களுக்கு ஆதரவு வழங்கல்-தத்தம் ஆதரவு பெறாதவர்களைத் தம் பக்கம் இழுத்தல்-அரசியல் தலைவர்கள் ஊடாடிக் கருத்துக்கள் வழங்கல் போன்ற மதர்ப்பான நிகழ்வினைகள் இந்த ஆண்டும் நடைபெறலாம்.

www.thamizham.net - Free E Books No TM 14717

அதனால் மாணவர்களின் நட்புணர்ச்சி-கல்வியின் மேல் அவர்களுக்குள்ள ஆர்வம் ஒருவர்க் கொருவர் தத்தம் நண்பர்களிடையே கொண்டுள்ள வகுப்பு வாத பேதமற்ற தன்மைகள் இவை போன்ற நல்லுணர்வுகள் அரசியல் என்னும் சாக்கடையால் அடித்துச் செல்லப் படலாம். அதனால் அரசியல் கலப்பற்ற மாணவ சமுதாயத்தை உருவாக்கி, மாணவ நண்பர்கள் வரவிருக்கும் கல்லூரித் தேர்தல்களில் பணியாற்றுவார்கள் என்று எதிர் பார்க்கின்றோம். அப்படி நடக்கும் நிகழ்வினைக் காண 'பூச்செண்டு' புன்னகை பூத்தவண்ணம் காத் திருக்கின்றது.

## எதிர்பாருங்கள் !

### —அடுத்த இதழ்—

*மகளிர் சிறப்பிதழாக வெளி வரப்போகின்றது.*

**'ஆணும் பெண்ணும் சரிநிகர் சமமென்று ஊதிடு சங்கே'** *என்றவாறு நாட்டிலே மகளிர்க்குச் சிறப்புச் செய்ய பூச்செண்டு வெளியிடும் சிறப்பிதழ் இது.*

*அதில்—*

* *மகளிர் எழுதும் "பூச்செண்டு" —திங்களுக்கு ஒரு கதை.*
* *மகளிரே காணும் சிறப்பான பேட்டிகள், எழுதும் வியத்தகு கட்டுரைகள்.*
* **கேள்வி-பதில் பகுதியில் உங்கள் கேள்விகளுக்கு விடை யளிக்கும் மூவரும் பெண்களே !**
* *இதுவரை எங்கும் நீங்கள் படித்திராத மகளிர் பற்றிய சிறப்புச் செய்திகள்.*

## பரிசு பெறுங்களேன் !

*** அடுத்த இதழ் முதல் கேள்வி—பதில் பகுதியில், மூவர் பதிலுக்கு மிகச் சிறந்த கேள்வி கேட்பவர்களுக்கு கடைசியாக வெளிவரும் 'ராணி முத்து' (விலை ரூ. 1) பரிசளிக்கப்படும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

*** கல்லூரித் தேர்தல்கள் தொடங்கி விட்டன. உங்கள் கல்லூரியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கல்லூரி செயலாளர், தலைவர் இவர்களைப் பற்றிய முழு வவரங்களை புகைப் படத்துடன் அனுப்பினால் பூச்செண்டில் அறிமுகம் செய்து வைக்கிறோம்.**

www.thamizham.net - Free E Books No TM 14717

# அன்புள்ள ஆசிரியருக்கு!

## ராணுவ முகாமிலிருந்து...

லட்சுமி ரேவதி எழுதிய "ராஜியைக் காப்பாற்றுங்கள்" என்னும் சிறு கதை உள்ளத்தைப் பிழிந்து கண்ணீரை மல்கச் செய்து விட்டது. ஆசிரியைக்கு எனது பாராட்டுக்கள். கேள்வி பதில் சிறப்பிதழுக்கு மகுடமாக விளங்கியது.

**—பி. பாலகிருஷ்ணன்**
C/o. 99, A.P.O. (ராணுவம்)

## ஒரு இளங்குருவிடமிருந்து...

பூச்செண்டு வீறுநடை போட்டு நாட்டிற்கு வீர தியாகிகளை உருவாக்கும் ஆக்கப் பணியில் ஈடுபட்டுள்ளது மகிழ்ச்சி தரும் செய்தியே. வளர்க மாணவர்களின் சேவை! வளர்க அவர்கள் தியாக மனப்பான்மை! வாழ்த்துகிறேன்.

**—இளங்குரு, யேசுதாஸ், பூனா-14.**

## ஒரு மாணவரிடமிருந்து...

ஏன் சினிமா விமரிசனத்திற்கு உங்களிதழில் இடமளிக்கிறீர் என்பது எனக்குப் புரியவில்லை. கி. மல்லிகாவின் 'சகோதரா' என்னும் உச்சமான குரலைக்கேட்டு இதயம் துடிக்கப் படித்தவர் பலர்—அதில் நானும் ஒருவன்.

**த. இராம்மோகன், ஜெயின் கல்லூரி,**

## ஜெர்மனியிலிருந்து...

எங்களைப்போன்ற பெற்றோருக்கெல்லாம் நாட்டில் நடக்கும் செயல்களைக் கண்டு உள்ளம் குமுறியிருக்கும் வேளையில், இப்பத்திரிகையைப் போன்ற நன் முயற்சிகள் வெற்றி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம். இந் நாட்டில் மக்கள் வாழும் வாழ்க்கையின் தரமும், வாழ்க்கை வசதிகளும் நாம் பெற வேண்டுமென்றால் மாணவர்களாகிய எதிர்கால குடிமக்கள் கையில் தான் இருக்கிறது. வளர்க உங்கள் தொண்டு.

**—எஸ். மார்கண்டன், இந்தியன் எம்பசி,**
**53, பான், கூட்டாட்சி ஜெர்மன் குடியரசு.**

## ஒரு நவீன எழுத்தாளரிடமிருந்து...

பூச்செண்டு ஒரு ஆச்சரியகரமான முயற்சி. மாணவர்களிடம் சாதாரணமாக எதிர்பார்க்க முடியாத சாதனை. என் உள்ளம் கலந்த ஆசிகள்! —ஆரம்பத்தில் இருக்கும் சூரத்தனம் சில மாதங்களில் சென்றுவிடும். பிடிவாதமாகத் தொடர்ந்து நடத்தும் உற்சாகமும் பலமும் உங்களுக்கு ஏற்பட மிகவும் விரும்புகிறேன்,

**—'சுஜாதா' —புதுடில்லி—**

www.thamizham.net - Free E-Books No TM 14717

## "மேகத்துரையரசே!..."

நெல்லை. சோமு

புலவர்—மூன்றுமாண்டு
தருமைத் தமிழ்க் கல்லூரி,
மாயூரம்.

மேகத் துரை யரசே—கொஞ்சம்
தாகத்தை நீ தணிப்பாய்
சோகத் தரையினிலே—வந்து
'சோ' வெனப் பெய்திடுவாய்!
(மேகத்)

காக்கை நிற மெடுத்தே—புவி
காக்கத் திற மெடுப்பாய்
சாக்கினில் நெல் நிரப்பி—தமிழர்
சஞ்சலம் நீக்கிடுவாய்!
(மேகத்)

ஆற்றினில் நீர் பரப்பி—சிறு
ஊற்றினை நீ யொழிப்பாய்
காற்றினில் வந்தவனே! —உயிர்
போற்றிட நீ குதிப்பாய்.
(மேகத்)

சுட்டிடும் சூரியனின்—கொடுமை
விட்டிட நீ வருவாய்
பட்டு நிலத்தாயின்—இடையைக்
கட்டிட வந்திடுவாய்.
(மேகத்)

ஓடுவதை நிறுத்தி—நீராய்
ஓடி வர வருவாய்.
பாடிய வள்ளுவனின்—பரிசைப்
பற்றிட வந்திடுவாய்!
(மேகத்)

## நிலவில் அடி யெடுக்கும் முதல் மனிதர்!

### 78 முறை கொரியாப் போரில் களம் புகுந்தவர்!

நில் ஆல்டென் ஆர்ம்ஸ்ட்ராங்.

இது தான் அம்புலியில் அடியெடுத்து வைக்க விருக்கும் முதல் மனிதனின் பெயர். மேற்கு அமெரிக்காவின் ஒஹையோ மாநிலத்தின் வாப்பக் கொனேட்டா என்ற ஊரில் 1930, ஆகஸ்ட் 5ல் பிறந்தவர் இவர். தந்தை மாநில அரசில் பணியாற்றி வந்தார்.

இவருக்கு ஐந்து வயதிருக்கும். இவரது ஊருக்கு முதன் முதலாக போர்ட் விமானங்கள் வந்தன. இவர் ஏறி பறக்கத் துடித்தார். அச்ச முற்ற தந்தையை ஒரு வழியாய் சமாதானப் படுத்தி அன்று பறந்தார். அது முதல், விமானம், விமானம், விமானம் தான்.

விமானம் பற்றிய பொறியியலில் பி.எஸ்ஸி. பட்டம் பெற்றார். அமெரிக்க விமானப் படையில் சேர்ந்தார். ஒரு முறையல்ல, இரு முறையல்ல; 78 முறை கொரியாப் போரில் களம் புகுந்தார்.

"நாஸா"வில் 1962-ல் சேர்ந்தார். ஆனால் அதற்கு முன்பே X-15 என்ற ஏவுகணையைச் செலுத்தும் திட்டத்தில் சோதனை விமானியாகப் பணியாற்றினார்.

1962 ஏப்ரல் 20ம் தேதி

X-15 விமானத்தை ஏழாவது முறையாக 2, 07, 500 அடி உயரம் சென்று விமானச் சாதனை புரிந்தார்.

www.thamizham.net - Free E Books No TM 14717

அதற்குப் பின—

விமானப் படை வெள்ளோட்டமா, கூப்பிடு ஆர்ம்ஸ்ட்ராங்கை என்பார்களாம்!

விமானச் சாதனைகள் கிடக்கட்டும், விண்வெளிச் சாதனைகள் உண்டா?

ஓ! உண்டே!

1966 மார்ச் 16-ம் தேதி, ஜெமினி 8-ல் தனது முதல் பயணத்தை மேற்கொண்ட சமயம். தமக்கு முன்னுலேயே எய்தப்பட்ட வேறொரு ஜெமினி கலத்துடன் சேர்ந்து கொள்வதாகத் திட்டம் (இப்பொழுது அப்போலோ ஒன்பது எப்படி நிலவு வாகனத்தை பிரித்துப் பின்னிணைத்துக் கொண்டதோ அது போல்) திட்டத்தை செவ்வனே நிறைவேற்றியாயிற்று. ஆனுல் எஞ்சினில் கோளாறு ஏற்பட்டு விட்டது. எப்படியோ சமாளித்து விட்டார்கள் போங்கள்!

இதைப் போல பல கண்டங்களைக் கண்டிருக்கிறுர், பயிற்சியின் போது.

1968 மே ஏழாம் தேதி இப்படித்தான் நிலவு வாகனத்தை இறக்கப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்தார். இறங்க வேண்டிய நேரத்தில் வேகம் கூடி விட்டது. கீழே விழுந்தால்...... அவ்வளவு தான்.


தனது சீட்டோடு பாராச் சூட்டில் பறந்தார். வெளியே வந்தார். திரும்பி பார்த்தால் நிலவு வாகனம் கீழே விழுந்து நொறுங்கி எரிந்து தீய்ந்து போயிருந்தது.

அமெரிக்காவிலேயே விமான விஞ்ஞானிகட்கு வழங்கப்படும் 'ஆக்டேல் கான்யூட்' என்ற விருதை பெற்ற இவர் விமான அறிவியலில் டாக்டர் பட்டம் வாங்கியவர். 5'11" உயரமும், 165 பவுண்டு எடையும் உள்ள இந்த 39 வயதுக்காரர் மணமானவர்; 12 வயதிலும் 6 வயதிலும் மகன்கள் இருக்கிறுர்கள்.

அனுப்பியவர்: **செல்வி. காயத்திரி,** புனித சிலுவை பள்ளி, தூத்துக்குடி.

—o—

சிரிப்பதற்கு!



* இப்போது பாருங்கள்—கல்லூரியில் இடம் பிடிக்க மாணவர்கள் எவ்வளவு போராட்டங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது. ஆனுல் சில மாதங்களில் 'எவ்வளவு கஷ்டப்பட்டு கல்லூரியில் நமக்குச் சேரும் அரிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது, நாம் எவ்வளவு முழுமையாக நமது வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்பதை அவர்கள் அறவே மறந்து விடுகிறுர்கள்.

www.thamizham.net - Free E Books No TM 14717

ஒரு 'மினி' பேட்டி :

# மலேசியா சென்று விட்டு வந்த மாணவர் என்ன சொல்கிறார்?

கேள்வி : அ. ம. சீ. செயினுல்லாபுதீன், துணையாசிரியர்.

பதில் : எம்.ஏ. பதிஉல் ஜமால், பி.யு.சி. (புதுக்கல்லூரியில் படித்தவர்.)

கேள்வி : இந்திய மண்ணைவிட்டு மலேசிய மண்ணில் உங்கள் காலடிகள் பதிந்த போது நீங்கள் என்ன உணர்ந்தீர்கள்.

பதில் : தாய் நாட்டை விட்டு அயல் நாட்டு மண்ணை மிதிக்கும் போது முதலிரவில் கணவனைக் காணப்போகும் மனைவியைப் போல தயக்கத்துடனும் ஏக்கத்துடனும் தனியராய் எப்படி வாழப் போகிறோம் என்ற ஏக்கத்தைத்தான் முதலில் என்னால் உணர முடிந்தது.

கேள்வி : அங்குள்ள மாணவர் வாழ்க்கை எப்படி இருந்தது ?

பதில் : ஒரு இனத்தவர் பிறிதொரு இனத்தவருடன் சாயாத வாழ்க்கை!

கேள்வி : அங்கு இந்தியர்களைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் ?

பதில் ? அங்குள்ளவர்கள் இந்தியர்கள் நம்பிக்கைக் குரியவர்கள் வெள்ளை உள்ளம் படைத்தவர்கள் என்று கருதுகிறார்கள். இந்தியர்கள் என்றாலே மகாத்மாவும், நேருவும் தான் அவர்கள் எண்ணத்தில் தோன்றுகின்றார்கள்.

கேள்வி : அங்கும் மாணவர்கள் ஏதாவது பத்திரிகை நடத்துகிறார்களா?

பதில் : எனக்குத் தெரிந்தவரை இல்லை.

கேள்வி : அங்கு தமிழ் பயிற்றுவிக்கப் படுகிறதா ?

பதில் : ஒவ்வொரு கல்லூரியிலும் கற்றுத் தரப்படுகிறது. முதல் உலகத் தமிழ் மாநாடு நடந்ததே மலேயாவில் தானே !

கேள்வி : அங்கு நாட்டின் பொது மொழி என்ன ?

பதில் : தமிழ், சீன, மலேசிய மொழிகள் ! —வியப்பாக இருக்கின்றதா?

கேள்வி : 'பூச்செண்டை' ப்பற்றி எப்படிக் கேள்விபட்டீர்கள் ?

பதில் : கல்கண்டு ஆனந்தவிகடன் வாயிலாகப் பூச்செண்டைப்பற்றி அறிந்து பெருமை கொண்டேன். இதைப்போல நாங்களும் ஒரு பத்திரிகை நடத்த விரும்புகிறோம். என அங்குள்ள மாணவ நண்பர்கள் கூறினார்கள்.

துணையாசிரியர் :— அப்படியா ! மிகவும் மகிழ்ச்சி ! 'பூச்செண்டு' வளர்ச்சிக்கான ஆக்க வழிகள் இருந்தால் அடிக்கடித் தாருங்கள்.

சரி வருகிறேன் வணக்கம் !

www.thamizham.net - Free E Books No TM 14717

**கற்பனைக்கூடம்**

பரிசு : "இதயம் பேசுகிறது"

# "அப்போலோ பதினொன்றில் நான் பயணம் செய்தால்?"

ஜூலை. 16. 1969

கேப் கென்னடிக்கு வடக்கே உள்ள மெரிட் தீவு பரபரப்பில் ஆழ்ந்திருக்கிறது. கை குலுக்கல்கள்; தொப்பி அலைப்புகள்; புன்சிரிப்புகள்; கட்டித்தழுவல்கள்; 'ஹாய்' குரல்கள்.

வான் வந்து நிற்கிறது. கதவை திறந்து கொண்டு இறங்குகிறார் ஆம்ஸ்ட்ராங், தொடர்ந்து நான், பின்னால் கர்னல். இப்பொழுது கையலைப்புகள் என்னை—எங்களை நோக்கி! கண்கள் கூர்மையாகின்றன. என் குடும்பத்தினரை தேடுகிறேன். சிறிய பிரீப் கேஸை சுமந்து கொண்டு எலிவேட்டர் நோக்கி நடக்கின்றேன்.

கிர்ர்ர் ...

98வது மீட்டர் உயரம். அப்போலோவின் கதவு திறக்கப்படுகிறது. உள்ளே போய் உட்காருகிறேன்.

கப்சிப்


கீழே எண்ணுகிறார்கள்.

10 9 8 7 6 5 4 3 2 1 0

கடவுளை நினைத்துக்கொள்கிறேன். எப்படியெல்லாமோ இருக்கும் என்று நினைத்தேன் ஒன்றுமில்லை. ஒரு ஜெட்டில் போவது போன்றுதான் இருக்கிறது.

ஆனால்—அணிந்து பழக்கமில்லாத அழுத்தம் செய்யப்பட்ட வெண்ணுடை. கனமான தொப்பி, ஆக்சிஜன் குழாய்கள்.

கீழிருந்து உத்திரவு வருகிறது. ஆம்ஸ்ட்ராங் பொறியை இயக்குகிறார். 38,800 கிலோ மீட்டர் வேகத்தில் பூமியின் ஈர்ப்பிலிருந்து விடுபட அப்போலோ கிளம்புகிறது.



பரிசு பெறுபவர் :

**வி. வே. நாராயணன்**
மூன்றாம் ஆண்டு பட்ட பார்மசி
மதுரை மருத்துவக் கல்லூரி

www.thamizham.net - Free E Books No TM 14717

அம்மம்மா ! ..... நம்பவே முடியவில்லை. வெளியே பார்க்கிறேன். அண்டவெளியின் அழகு, செய்தி தாளில் புகைப்படங்களாகப் பார்த்தவை. ஆப்பிரிக்கா! ஆஸ்ட்ரேலியா, இந்தியா, ஓ! மை குட் இந்தியா,

நிலவு பற்றிப் படித்தவைகள் நினைவுக்கு வந்தன. 120 பவுண்டுகள் உள்ள நான் அங்கே 20 பவுண்டு தான் இருப்பேன். வெப்பம் எவ்வளவு இருக்கும் தெரியுமா? 243° F குளிர் ?—279° F

கீழே இருப்பவர்கள் என்னைப்பற்றி கேட்கிறார்கள். கலக்கமா? சிரிக்கின்றார் ஆம்ஸ்ட்ராங். நாட்கள் போனதே தெரியவில்லை. இடையே ஒரே ஒரு தடவையே உதயசூரியனைப் பார்த்த தாய் நினைவு. கையிலுள்ள தேதி வைத்த கைக்கடிகாரத்தைப் பார்த்தேன்: ஒழுங்கிலா ஒழுங்கில் அது ஓடிக்கொண்டிருக்கிறது.

நாளை நாம் சந்திரனில் இறங்கப் போகிறோம் ;நீங்கள் அவசியம் உறங்க வேண்டும் என்கிறார் ஆம்ஸ்ட்ராங் தூக்கம் வருமா? கர்னலைப் பார்க்கிறேன். அவருக்கு அம்புலியில் அமெரிக்க கொடியை பறக்கவிடவே மனமில்லை. 'எல்லாம் இந்த அரசியல் சைத்தான்களின் வேலை' என்கிறார் அம்புலியிலும் அரசியலா ?

மறுநாள். அப்போலோவை விட்டு பிரிகிறோம். மெள்ள மெள்ள; மெல்ல மெல்ல! அதோ அமைதிக் கடல்! நான் கடவுளை வேண்டிக்கொள்கிறேன். சந்திரனில் இறங்கி விட்டோம். கண்ணாடி வழியே வெளியே பார்க்கிறேன். ஒரே குழிக்குழியாய் இருக்கிறது. மதிவதனமோ? என்னை உள்ளே இருக்கச் சொல்லிவிட்டு கீழே இறங்குகிறார் கர்னல். நான் மனம் குமைகிறேன. சந்திரனில் இறங்கிய 'முதல்' மனிதராய் அவரல்லவோ ஆகிவிட்டார்? என்ன இருந்தாலும் நான் இரண்டாவது தானே? சுவிஸ் உதவியுடன் செய்யப்பட்ட ஒரு கருவியை எடுத்துக் கொடுக்கிறேன். பின்னர் ஒரு நீண்ட ஸ்கூப்பை எடுத்துக் கொண்டு கீழே இறங்குகிறேன். காலாற நடக்க வேண்டும் போலிருக்கிறது. ஆனால் நூறு மீட்டர் தூரம் தான் நடக்க வேண்டும் என உத்திரவு இருக்கிறது. கற்களை பொறுக்குகிறேன். கான்வென்டில் படிக்கும் போது மதருக்குப் பயந்து கல் பொறுக்கியது நினைவுக்கு வருகிறது.

சந்திரனிலிருந்து கிளம்பி அப்போலோவில் இணைந்து கொண்டோம். மீண்டும் அப்போலோ பயணம். சந்திரனைப்பற்றி உங்களுக்கு தெரிந்த பாடல்களை பாடச் சொல்கிறார்கள். நான் தை மாதம் மேகம் பாட்டுப் பாடுகிறேன். வேறொன்றும் நினைவுக்கு வரவில்லை.

பூமியில் வரவேற்பு தடபுடல். நிக்சன் கைகுலுக்குகிறார்.

பேட்டியா? இப்ப ஒன்றும் தொந்திரவு செய்யாதீர்கள். டி. வி. யில் நிகழ்ச்சிக்கு கிளம்பிக் கொண்டு இருக்கின்றேன். பின்னொடி பார்ப்போம்.

✣

---

அடுத்த இதழ் கற்பனைக் கூடத்திற்கான தலைப்பு :

**"சிலம்புச்செல்வி கண்ணகியுடன் ஒரு கற்பனைப் பேட்டி"**

**பரிசு : "பாரதியாரின் கவிதைகள்" (முழுவதும்)**


முழுத்தாளில் 3 பக்கத்திற்குள் உங்கள் கற்பனை செல்கின்றபடியெல்லாம் எழுதலாம். வந்து சேர வேண்டிய இறுதி நாள்: 25–7–69.

---

www.thamizham.net - Free E Books No TM 14717

ரீத்தா

# அஞ்சல் பெட்டி 520



பாய்ந்து வரும் கார்கள், பயங்கரமான மோதல்கள், ஆங்கிலப்படம் போலவே எடுத்திருக்கிறார்களே! மயிர்க்கால்கள் சிலிர்க்கிறதே! இந்த அளவுக்கு தமிழ் படம் எப்பொழுது முன்னேறியது! உட்கார்ந்து பார்க்க முடியவில்லையே! தியேட்டர் எங்கும் பரபரப்பு. விசில் சத்தங்கள் ஆரம்பத்தில் தான்! ஆங்கிலப்படம் போல அல்ல, ஆங்கிலப் படமே தான்! படத்தில் படம் வருவது போல் ஒரு காட்சி; சப்பென்று போகிறது இருந்தாலும் இணைத்திருக்கும் முறை பாராட்ட வேண்டியது தான்!

கதையில்லாக் கதை.

சிரிப்பதற்காக எடுக்கப்பட்ட படம். கொஞ்சம் சிரிக்கவும் செய்கிறோம். ஆனால் நாகேஷ், தேங்காய் சீனிவாசன் தங்கவேலு, மூர்த்தி, மனோரமா......... என்று பட்டியலைப் பார்த்தால்! அந்த அளவுக்கு இல்லை,

நடிப்பில்.........சுந்தரராஜன் தான் கண் முன்னால் நிற்கிறார். மனுஷன் சரளமாக ஆங்கிலத்தில் பொழிந்து கொண்டே விடுதலையானவர் — “என் பிரபு நிச்சயமாக குற்றவாளியாக இருக்க முடியாது” என்று கூறிக் கொண்டே மறுபடியும் உள்ளே போய் சிறைக் கதவை அடைத்துக் கொள்கிறாரே. அது நடிப்பு.

சிவாஜி—சரோஜாதேவி (திருமதி !) அலுத்துப் போச்சு.

சிவாஜி கால்களுக்கு இடையே பெட்டியைப் போட்டுக் கொண்டு ஆட்டம் காட்டிக் கொண்டே போடுகிறாரே, சண்டை—அது ஜோர்.

சிவாஜியும் தேவியும் உச்சி வெயிலில் கடற்கரையில் காதல் பாட்டுப் பாட அதைப் பொதுமக்கள் வேடிக்கைப் பார்க்க திரண்டு வரும் பொழுது போலீஸ்காரர் துரத்துகிறாரே (நடிப்பல்ல)—அது போர்.

தங்கவேலுவின் நகைச்சுவை தனிச்சுவை. விஜயலலிதாவின் கொடுமையான ஆட்டம்—தியேட்டரில் இருக்கும் பெண்கள் தலைகுனிய—நாகேஷ், மனோரமா, கார் அருகில் நின்று கொண்டு பேசும் பேச்சு, கருமம்—கருமம்.

www.thamizham.net - Free E Books No TM 14717

கட்டிடத்தோடு சென்னையில் இருக்கும் டீலக்ஸ்—ஹோட்டல் எப்படி மதுரைக்கு வந்தது. (எவ்வளவு பணம் வாங்கினார்களோ !)

இனிப்பாக ஆரம்பித்து, ஜவ்வாக இழுத்து போரடித்து, கபக்கென்று வயிற்றுக்குள் போய் இன்ப மூட்டுமே ஒரு பொருள். சுவிங்கம்.

---


அட்டைப் படம்! அழகுப்படம்!

* அட்டையில் உள்ள அழகுக் குழந்தைகளை அருமையாக எடுத்துத் தந்தவர்.

*சீதாராமன், சென்னை-1.*


*With best compliments from :*

PILOT PEN CO. (India) PVT LTD.




'Catholic Centre,' Armenian St, MADRAS-1.


www.thamizham.net - Free E Books No TM 14717

ஒரே தலைப்பில் திங்களுக்கு ஒரு கதை

எப். வில்லியம் பர்ணாண்டஸ்.
பொறுப்பாசிரியர்.

---

"இயற்கையோடு போராடலாம். ஆனால் இயற்கைக்கு எதிராகப் போராடக் கூடாது"
Nature is always there to balance.

---

உங்களுக்கு ஒரு நிபந்தனை !

என் கதையை மனம் திறந்து உங்களிடம் கூறுகிறேன். இதைப் படித்து விட்டால் மட்டும் போதாது. அதற்குப்பின் நடைபெறும் சம்பவங்கள் ஒவ்வொன்றிலும் நீங்கள் பங்கு பெறுவதாக இருந்தால் ......எனக்காகக் கோர்ட்டுக்கு வருவதாக இருந்தால்.... மேற் கொண்டு தொடருங்கள். இல்லையேல் பேசாது புத்தகத்தை மூடி வைத்துவிட்டு உபயோகமான காரியம் எதையாவது செய்யுங்கள்.

பதினைந்து பங்களாக்கள், பதிமூன்று லாரிகள். ஏழு கா...... நிறுத்திக் கொள்கிறேன்.

எனக்குத் தேவை மூன்று.

ஒன்று பணம்.
இரண்டு பணம்.
மூன்று, பணம்.

ஏன் கூடாது ?

எங்கோ இருந்து இங்கே வந்து கோடிக் கோடியாக கொட்டிக் கொள்ளும்பொழுது இங்கே பிறந்து இங்

---

[மனோதத்துவம் தெரியுமா உங்களுக்கு?
அப்படியானால்
இந்தக் கதை எளிதாகப் புரியும்.]

---

என்னைப்பற்றி......

என் பெயர் செல்வம். பெற்றோர் இட்டப் பெயர் பன்னீர்செல்வம். பெயரைப் போலவே...ம், அதிகம். 75+25 என்றால், முன்னது தாத்தா, பின்னது அப்பா. இப்போது இருவரும் இல்லை. இருப்பது ஆறு மில்கள், ஒன்பது எஸ்டேட்டுகள், பத்துப்

கேயே வளர்ந்து ஓரளவு உள்ள நான் .... அதைப் பெருக்கிக் கொள்வது தவறா ?

உழைக்கிறேன். ஆனால் ஊதாரியாக இல்லை. அதற்குப் பட்டம்— கருமி!.

என் உள்ளம் ஒரு ஆழ் கடல். அதனுள் எத்தனையோ சுழலோட்

www.thamizham.net - Free E Books No TM 14717

டங்கள், எத்தனையோ கொந்தளிப்புகள். ஆனால் அமைதி அதன் தனித்தன்மை.

கோபம் அடிக்கடி வரக்கூடியது (எனக்குத்தான்) ஆனால் உள்ளுக்குள்ளே குமைவு. கடும உழைப்பு. அதை மற்றவர்களிடம் காணுத போது ஏற்படுவது வெறுப்பு.

கல்யாணம். பிள்ளை......குட்டி? வேண்டாம் சார்......அப்படித் தான் சொல்லிக் கொண்டிருந்தேன். கொஞ்சகாலம்.

கருணைப்பிறக்காத, உணர்ச்சிகள் அழிந்துபட்ட இந்த உள்ளத்தின் எங்கோ ஒரு மூலையில், ஒரு விரிசல். ஆம் வேதனையின் நெடி. அதன் விளைவால் எழும் ஒருவகை பாசம். யாரிடமும் அல்ல, மழலைக் குழந்தைகளிடம். எச்சில்ஒழுக அவைகள் சிந்தும் சொல்லமுதம். யார், யார் குழந்தைகளோ! அந்தச் சில்லரன்ஸ் கார்டனில், கூடி கும்மாளம் இடும் அந்த இனியக்காட்சி. என்னை மறந்து நின்றிருப்பேன். ஏக்கம் என் விழிகளை சுழலவிடும். அள்ளி அணைக்க கைகள் துடிக்கும். அவைகள் அருகில் அமர்ந்து அந்தப் பிஞ்சு விரல்களைக் கிள்ளி அழவிட்டு...அவைகள் ஒன்று தான் என்னை மனிதனுக்கும் ஒரே ஆயுதம். யார் வைத்திருந்தாலும் சரி. அது யாருடையக் குழந்தை என்றாலும் சரி எடுத்துக் கொஞ்சுவேன்.

"கலியாணம் செய்து கொள்வது தானே? ஊஹூம்...... அவள் எப்படி இருப்பாளோ?

தினம் பன்னிரண்டிலிருந்து ஒன்று வரை......அந்த நேரம் அப்பப்பா! அத்தனைக் குழந்தைகளும் மாமா! மாமா! என்று அழைக்கும் பொழுது அதன் மத்தியில், கலகலப்பில் என்னை. பணத்தை பிரச்சனைகளை ......எல்லாவற்றையும் மறந்திருப்பேன். அப்படியே இருந்திருப்பேன். அவளை சந்திக்காது இருந்திருந்தால்!

அவள்! தெரியவில்லை? அவள் தான். அந்த சில்லரன்ஸ் கார்டனில் ஆசிரியை. இப்பொழுது என் மனைவி. ஆனால் அவள்...இன்றில்லை...பின்? (பிறகு சொல்கிறேன்.)

வறுமை அவளை ஆசிரியை ஆக்கியிருந்தது. பெரிய குடும்பம். பெரிய குடும்பம் என்றால் நீங்கள் கற்பனை பண்ணி, பயந்து போகும் அளவுக்கு. ஆனால் பார்ப்பதற்கு. அழகு..அழகு.. அழகு (நீங்கள் தான் பக்கத்தில் படத்தில் பார்க்கிறீர்களே?) இன்னும் எத்தனை தடவை வேண்டுமானாலும் சொல்வேன். அவ்வளவு அழகு.

காரில் வந்து, இந்தக் குழந்தைகளுடன் நான் கொஞ்சுவதை கவனித்திருக்க வேண்டும். அந்தக் காந்த விழிகளுக்கு என்னையும் ஒரு குழந்தையாக்கும் சக்தி இருந்திருக்கிறது. தினம் பள்ளியில் பார்ப்பேன். பேசமாட்டேன். 'மனேஜ்மென்டார்'



www.thamizham.net - Free E Books No TM 14717

என் வரவு பற்றி ஒன்றும் சொல்ல மாட்டார்கள். பினனே ஐம்பதினு யிரம் கொடுத்திருக்கிறேனே! பள்ளிக் கூட நிதிக்கு.

என்னைக் கண்டதும் சுற்றிச் சூழ்ந்து களிக்க வைக்கும் மழலைச் செல்வங்கள். அவளைக் கண்டதும் வெல்லப்பாகில் ஈக்கள் மொய்ப்பது போல் அவளிடம் ஒட்டிக்கொள்ளும். ஒரு அலட்சியப் புன்னகை பிறந்து அழியும் அவளிடம் இருந்து. என்னை நோக்கியல்ல. என் பணத்தின் மதிப் பை எண்ணி!

அலட்சியம் எனக்கு சொந்தமா யிற்று. பின்னே எனக்குப் பெண் கொடுக்க அந்தப் பெரிய குடும்பத் திற்கு (நீங்கள் கற்பனை பண்ணி பார்த்தால் பயப்படும் அளவுக்கு) கசக்குமா? இருபதினாயிரம் கொடுத் திருக்கிறேனே?



எண்ணிக் கொள்ளுங்கள். ஒன்று ...இரண்டு...மூன்று ..வருடங்களைத் தான். திருமணம் ஆகி மூன்று வரு டங்கள் ஆயிற்று. இப்பொழுதும் அந்தப் பள்ளிக்குச் சென்று வரு கிறேன். எத்தனையோ குழந்தைகள் ஒன்று கூட எனக்குச் சொந்தமில்லை.

அவளிடம் கேட்பேன். அந்தக் கன்னக் கதுப்புகளில் நாணத்தை யும் மீறி ஒருவித மருட்சி! காரணம்? சொல்ல மாட்டாள்!

---

*** அடிக்கடி உடம்பு சரியில்லை என்று கூறும் ஒரு பெண்ணை சுகப் படுத்த ஒரு வழி: முதுமை தொடங்கி விட்டது என்பதை அறிவுறுத்துவது தான்.**

—யாரோ.

---

அன்று என் உள்ளத்தில் கொந் தளிப்பின் ஆரம்பம். வேதனை நிரம்பி வழிந்து சிந்தி தெறிக்கும் நிலை. பின் என்ன? மருத்துவரைப் பார்க்கலாம் வா. இந்த வீட்டில் ஒரு இளங்குருத் தின் மழலையை ஒலிக்கச் செய் என்றால்...சிரிப்பு. சலிப்பு. வெறுப்பு, என்று கடத்திக் கொண்டே இருந் தால்?.

தனித்து கேட்டால் வருவாளோ? மொட்டை மாடி (கைப்பிடிச் சுவர் கட்டவில்லை. மேற்கொண்டு மற்றொரு மாடிகட்ட உத்தேசம்.) சந்தனத்தை அள்ளித் தெளிக்கும் நிலவு. அந்த இன்பமான சூழ்நிலையில்,

"இதைப் பார்த்தீர்களா"? அவளது செம்பவள உதடுகள் சிந்திய சங்கீதத் துளிகள்,

"இந்த ஸ்வட்டர், உங்களுக் காக நானே பின்னியதாக்கும். பிடிக் கிறதா?"

"எனக்குப் பிடிக்கிறது இருக்கட்டும். எனக்குப் பிடித்தது நடக்கவேண்டும். அதாவது என் பிரச்சினைக்கு முடிவு காணவேண்டும்."

www.thamizham.net - Free E Books No TM 14717

நாளை டாக்டர். வத்சலாவை வரவழைக்கப் போகிறேன். அவளிடம் உடம்பைக் காட்டி ஒழுங்காக மருந்து சாப்பிடவேண்டும்... என்ன?

அமைதியாக. ஆதங்கத்துடன் பேசும் என் சொற்களை கேட்க விரும்பாதது போல் எழுந்து, நின்று நடந்து ... 'நில்மலர்'' (முழுப்பெயர் மலர் செல்வி) ' நான் பேசிக்கொண்டே இருக்கிறேன். நீ சென்று கொண்டே இருந்தால்? ... ..'' முடிக்கவில்லை நான். கண்ணீர்த் துளிகள் திரண்டுவர.. என்னை வற்புறுத்தாதீர்கள். உங்கள் ஏக்கத்தை புரியாதவள் அல்ல நான். ஆனால் உங்கள் ஆவலைத்தீர்க்க நான் தகுதியானவள் இல்லை என்றவள் என்னிடம் இருந்து ஒதுங்கிச் செல்ல ..ஏன்? எதற்காக? உடனே தெரிந்தாக வேண்டும்.'' என்று கோப வெறிகொண்டு நான் துரத்திச்செல்ல.

''என்னை மன்னித்து விடுங்கள். வறுமை...பணம் கிடைத்தால் போதும் என்றுப்பேயாக அலையும் தரகர்கள் எண்ணிக்கை கூடினால், பாராட்டும் பத்திரமும் கிடைக்கும் என்றுப் போராடும் ஒரு சில டாக்டர்களின் ஒத்துழைப்பு—முடிவு—என் கையில் முப்பது ரூபாய் அவர்களுக்கு ஒரு அறுவை சிகிச்சை. எப்படி நடந்தது? நான் கன்னிப்பெண்ணாக இருந்தேனே? என்று கேட்கிறீர்களா?

சூழ்நிலை, சந்தர்ப்பம், நோயுற்று இருந்த அம்மாவை மருத்துவமனையில் காண்பிக்க சென்றிருந்த போது ஏற்பட்ட தவிர்க்க முடியாத பணநெருக்கடி. ஒரு சில தரகர்களின் ஆசை வார்த்தைகள்...என்னைப் பலிவாங்கி விட்டது.''முடிக்கவில்லை அவள்என்னை விட்டு ஓடியவள் கட்டடத்தின் விளிம்பில் இருந்து......பின் நடந்ததை நான் சொல்ல விரும்பவில்லை.

பல மலர்கள் இணைந்து உருவாகியது தான் பூச்செண்டு. அதில் இருந்து வரும் மணம் எல்லாம் நன்றாக இருக்கும் என்பதில்லை. அதற்காக அவை பார்வைக்கு அழகில்லாமல் போய் விடுவதும் இல்லை. கொஞ்ச காலம் உபயோகமாக இருந்து வாடி வதங்கி விடுகிறது. அதுபோல நானும் பல குணங்களின் கலவை தான். என் குணம் பெரிதல்ல. என்றால் உண்டான உபயோகம் தான் பெரிது. ஆனால் இன்று வாடி வதங்கி உதிர்ந்து துவண்டு விட்டேன்.

அவள் போய் விட்டாள்? நல்லதற்கோ கெட்டதற்கோ இயற்கைக்கு எதிரான போட்டத் திட்டம் இன்று என் இதயத்திற்கு உரியவளையும் எடுத்துக் கொண்டது. இப்படி நடக்குமா? என்று கேட்காதீர்கள். நடந்து முடிந்து விட்டதே! அதற்குப் பதில் சொல்லுங்கள். வாழ்க்கையை வெட்டிக் கொள்ளமட்டுமல்ல ஒட்டிக் கொள்ளவும் முடியும் என்பதை மறந்து விட்டாள் அதனால் தான் என்னை விட்டுப்பிரிந்து விட்டாள்.

இனி நான் கொஞ்சம் கொஞ்சமாக முடித்துக் கொள்கிறேன். என் வாழ்வை மட்டுமல்ல. இந்தக் கதையைக் கூடத்தான்.

வழக்குப் போட்டிருக்கிறேன். யார் மேல்? அரசாங்கத்தின் மேல் தான். அதை நடத்த நான் இருக்கமாட்டேன். ஆனால் என் உயில் நடத்தும். ஆரம்பத்திலேயே சொல்லி விட்டேன் என் கதைக்குப் பின் நடைபெறும் ஒவ்வொரு சம்பவத்திலும் நீங்கள் பங்கு பெற வேண்டுமென்று...அடுத்த மாதம் வழக்கு ஆரம்பம் எனக்காக கோர்ட்டுக்கு நீங்கள் போவீர்களா?

---

* ''ஒரு நண்பனுக்காக உயிரையே கொடுக்கத் தயார், ஆனால் மற்றொரு நண்பனை இழக்கத் தயாராக இல்லை.''

தகவல்: வெ. வேதமூர்த்தி
மதுரை மருத்துவக் கல்லூரி.

www.thamizham.net - Free E Books No TM 14717

# கண்டக்டரைச் சந்தியுங்கள்!


மந்தைவெளி பஸ் நிலையம்! நிலைய ஓய்வு அறையில் இருவர் சுவையாக ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள். கண்டக்டரைப் போல இருந்த ஒருவரிடம் போய்......

"மன்னிக்கவும். நீங்கள் ஒரு கண்டக்டரா?" என்றோம்.

"ஆம்! என்ன?"

'கொஞ்சம் உங்களிடம் தனியாக பேச வேண்டும். சற்று இப்படி வர முடியுமா?"

"ஆ!. என்னிடமா? எதற்கு! நான் என்ன செய்தேன். நீங்கள் யார்? என்னிடம் என்ன பேச வேண்டியிருக்கிறது'" —இப்படி எதுவும் கேட்கவில்லை அந்த நபர். . . உடனே எதுவும் பேசாமல் பக்கத்தில் இருந்த கல் ஆசனத்திற்கு எங்களுடன் வந்தார். மனிதர் வியப்பு எதனையும் காட்டாது எங்களுடன் வந்தது எங்களுக்குத்தான் வியப்பைத் தந்தது.



அமைதியாக "என்ன? சொல்லுங்கள்" என்றார் உட்கார்ந்தபடி. முதலில் நம் பத்திரிகையைப் பற்றி விளக்கம் கொடுத்துவிட்டு உங்களிடம் சில கேள்விகள் கேட்க வேண்டும் கேட்கலாமா?" என்றோம்.

"ம்! கேளுங்கள்." மகிழ்ச்சியாக பதிலளிக்க முன் வந்தார். "முதலில் உங்கள் பெயர் படிப்பு இவை பற்றி விவரங்களை சொல்ல முடியுமா?"

"என் பெயர் பழனிவேலு. எஸ். எஸ். எல். சி. வரை படித்திருக்கிறேன். தட்டெழுத்து தெரியும். ஒன்றறை ஆண்டுகளாக கண்டக்டராக இருக்கிறேன். '4c' எனது 'ரூட்'"

சரி, நல்ல கேள்விகள் நிறைய கேட்க வேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டு "இன்னும் சற்று நேரம் இங்கு இருப்பீர்களல்லவா? உடனே டியூட்டிக்கு போக வேண்டி விசில் அடித்து விட மாட்டார்களே?"

'இல்லை! இல்லை. நேரம் இருக்கிறது. நீங்கள் கேளுங்கள்."

"ஆம். உங்களுக்கு இந்த வேலை பிடிக்கிறதா?"

"எனது குடும்பத்தை நான் தான் காப்பாற்ற வேண்டியிருக்கிறது எனவே எனக்கு இந்த வேலை பிடிக்கிறது"

அதாவது குடும்பத்தை தான் காப்பாற்ற வேண்டியிருப்பதால், இந்த வேலையை பிடிக்கும் வேலையாக மாற்றி கொண்டார் என்று நாங்களே விளக்கம் கொடுத்துக் கொண்டோம். (வெளியே வந்து)

"ஆமாம்! மாணவர்கள் —கண்டக்டர்கள் நல்ல தொடர்பில்லையே. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"சிலர் பஸ்ஸில் மோசமாக நடந்து கொள்கிறார்கள் சார். பல மாணவர்கள் பொதுவாக நல்ல முறையில் நடந்து கொள்கிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் சில மாணவர்கள் ரொம்ப அதிகமாக இப்போதெல்லாம் கலாட்டா பண்ணுகிறார்கள். நானும் தான் மாணவனாய்

www.thamizham.net - Free E Books Nφ TM 14717

இருக்கும் போது ரொம்ப கலாட்டா பண்ணியிருக்கிறேன். ஆனால் அப்பா! இப்போ இருக்கும் மாணவர்கள் ரொம்ப ஜாஸ்தி. ஆனல் கடைசியில் மாணவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்கிறார்கள்.''

''ஸ்டூடன்ஸ்' ஸ்பெஷலில் இருந்தீர்களா?''

''ஆம் S S20ல் வருடக் கடைசியில் நன்ருக இருந்தது. பஸ்ஸிலே மாணவர்கள் கடைசிநாள் கொண்டாடும் போது 'கப்' பெல்லாம் கொடுத்தார்கள். நல்ல முறையில் நடத்தினர்கள்.''

'' உங்களுக்கு எவ்வளவு நேர வேலை''

''மொத்தம் 8 மணி நேரம் டியூட்டி ரெஸ்ட் போக மொத்தம் 6மணி நேரம் பஸ்ஸிலேயே போய் வந்து கொண்டிருக்க வேண்டும்''

வெகு நாளாக கேட்க வேண்டும். கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேயிருந்த ஒரு நல்ல கேள்வியை அடுத்தபடி வீசினேம்:

''சென்னையில் கண்டக்டர்கள் ரொம்ப ரொம்ப மரியாதைக் குறைவாக பயணம் செய்பவர்களிடம் நடந்து கொள்கிறார்களே. ஆனல் அதே சமயத்தில் மதுரையில், மற்ற நகரங்களில் பாருங்கள்! எவ்வளவு வித்தியாசம். நீங்கள் ஏன் இப்படி நடந்து கொள்ள வேண்டும்?''

---

***நம்மால் என்ன செய்ய முடியும் என்பதை வைத்து நாம் நம் திறமையை மதிப்பிடுகிறேம், ஆனல் மற்றவர்கள், இதுவரை நாம் என்ன செய்திருக்கிறேம் என்பதைக் கொண்டு நம்மை மதிப்பிடுகிருர்கள்.**

—லாங்பெலோ

---

அவரும் விளக்கமாக சொல்ல வேண்டுமென்று ''சார்'' என்று ஆரம்பித்தார். அதே நேரத்தில் கண்டக்டரோடு முதலில் பேசிக் கொண்டிருந்த டிரைவரும் இந்தக் கேள்வியில் நாட்டங் கொண்டு எங்களுக்கு எதிரே உள்ள பெஞ்சில் அமர்ந்தார்.

''சார்! நம் டிரான்ஸ்போர்ட்டு பஸ்ஸிலே நிற்பது 25 பேர்; உட்காருவது 36பேர்; மொத்தமாக 61 பேர் தான் இருக்க வேண்டுமென்று ரூல். ஆனல் அப்படியா பஸ்களில் நடக்கிறது. சொல்லுங்கள்? ஜனம் கண்டபடி ஏறுது. வண்டியை விட மாட்டேங்கறுங்க. இன்னேன்னு. கண்டக்டர் டிக்கெட் டிக்கெட்ன்னு பலமுறை கேட்டாலும் சிலர் டிக்கெட் வாங்கறதில்லை. சிலர் 10பை சாவுக்கு வாங்கிக் கொண்டு கடைசி வரை வருகிருர்கள். இப்படியெல்லாம் செய்வதால் தான் நாங்கள் அப்படி நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது.''

''உங்களால் மறக்க முடியாத நிகழ்ச்சி இதுவரை ஏதாவது உங்கள் அனுபவத்தில் நடந்திருக்கிறதா?''

''நிறைய! எத்தனையோ பேர் மணி பர்ஸ் வாட்ச் இவற்றை விட்டுவிட்டு போய் இருக்கிருர்கள். நான் கண்டு பிடித்து சென்ட்ரல் டிப்போவில் கொடுத்திருக்கிறேன். சமீபத்தில் ஒரு டீச்சர் அம்மா அவசரமாக பஸ்ஸிலே ஏறினர்கள். அடிக்கடி வருவதால் எனக்கு பழக்கமானவர்கள். கிளம்பிய அவசரத்தில் காசு எடுத்து வர மறந்து விட்டார்கள். விஷயத்தை என்னிடம் சொன்னர்கள். பரவாயில்லை நாளை'கொடுங்கள் என்று டிக்கெட் கொடுத்து விட்டு, திரும்பி வருவதற்கும் சில்லறை கொடுக்க முன் வந்தேன். ஆனல் மறுத்து விட்டார்கள். பள்ளியிலே கேட்டு வாங்கிக் கொள்வதாக சொல்லி விட்டார்கள். இப்படி எத்தனையோ தின நிகழ்ச்சிகள்.''

www.thamizham.net - Free E Books No TM 14717

"டிரைவர்களைப் பற்றி பலர் டிரான்ஸ்போர்டு டிரைவர்கள் ரொம்ப "ராஷ்" டிரைவிங் செய்கிறார்கள்? என்று குற்றம் சாட்டுகிறார்களே' ஏன் இவ்வளவு வேகமாக வண்டியை மோதுவது போல செலுத்த வேண்டும்?"

இப்போது எதிரே இருந்த டிரைவர் மிக ஆர்வமுடன் குறுகிட்டு பேசத் தொடங்கினார்.


"ராஷா ஓட்டறோம்னு அதுக்கு காரணம் தெரியுமா சார்? எங்களுக்கு ரன்னிங் டைம் இத்தனைன்னு வச்சிருக்கான். உதாரணமாக இங்கிருந்து ஒரு டர்மினசுக்கு 26 ஸ்டாப்பிங் இருக்கிறது. இத்தனை ஸ்டாப்பிங் கிலேயும் நிறுத்தி, டயத்துக்கு போய் சேர வேண்டும். மொத்தம் 10நிமிஷம் தான் தாமதமா வரலாம். அதுக்கு மேலே வந்தா மேமோ இஷ்யூ பண்ணிடுவாங்க. அதே மாதிரி 8நிமிஷத்துக்கு முன்னாலேயும் வந்துவிடக் கூடாது. பாருங்கள்! இந்த மாதிரி சந்தர்பத்திலே லேட்டாக வந்து. அடுத்த டிரிப்புக்கு மீண்டும் கிளம்ப வேண்டிய சின்ன ரெஸ்ட் டயத்தை எந்த டிரைவராவது சாக்ரி பைஸ்" பண்ணுவாங்கலா? வேகமா ஓட்டினு போய் கொஞ்ச நேரமாவது ரெஸ்ட் எடுக்கத்தான் பார்ப்பாங்க. மேலும் 1 மணீ நேரம் வண்டி லேட்டா வந்தாலே ஒழிய, அந்த வண்டி லேட்டாக வந்தாலும் உடனே மீண்டும் கிளம்பியாக வேண்டும். லேட்டை அட்ஜெஸ்ட் பண்ணுவதற்காக ஒரு ஸ்டாப்பிங்விட்டு ஒரு ஸ்டாப்பிங் பறக்க வேண்டியிக்கும். ஆனால் பாக்கறவங்களுக்கு இது தெரியுமா சார்? வண்டியை எப்படி ஓட்டறான் பார்னு தான் சொல்லுவாங்க. இப்படி இல்லாக்காட்டி நாங்க என் சார் தலை தெறிக்க ஓட்டப் போறோம்"

"இவரது நீண்ட விளக்கம் முற்றுப் பெறவில்லை. அதற்குள் "ப்பீக் ப்பீக்"—கடமையைத் தட்டியழைக்கும் விசிலை அடித்து விட்டார்கள்.

"சார் அடித்து விட்டார்கள். கிளம்பியாக வேண்டும்" என்றார்கள் கடமையுணர்வோடு.

"அட்லீஸ்டு படங்களாது வேகமாக எடுத்துக் கொண்டு போகிறோம்".

"தாராளமாக எடுங்கள் சார்!" என்றார் கண்டக்டர். டிரைவர் வண்டிக்கு உள்ளே போய் அமர்ந்து விட்டார். கண்டக்டரை அவசரமாக மங்கிய ஒளியில் இரு படங்கள் எடுத்தோம்.



உடனே பஸ் கிளம்பிற்று. கைகளை யாட்டியபடி புன்கையுடன் விடை பெற்றார்கள்.

கண்டக்டர்களைக் குறை கூறி,

மாணவர்கள் பலர் சொல்வதை கேட்கிறோம். தினம் மக்கள் குறை படுவதைப் பார்க்கிறோம். செய்தித் தாள்களில் பலர் கண்டித்து எழுதுவதையும் படிக்கிறோம்.

இங்கு கண்டக்டர் ஒருவரே சொல்வதையும் படித்து விட்டீர்கள். இப்போது நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்!

பேட்டி : பார்த்தசாரதி
—செயற் குழு
இ. ஜே. சுந்தர்
—ஆசிரியர் குழு

www.thamizham.net - Free E Books No TM 14717

நீ நாயோ மாடோ அல்ல! மனிதன்! ஆகவே குறிக்கோளுடன் நீ வாழத்தான் வேண்டும். எனவே உனது வாழ்வின் இலட்சியமான

# குறிக்கோளைக் கொன்று விடாதே!

## இ. எஸ். மெர்வின்


"குளத்தைத் தேடித் தவளைகளும் தடாகத்தைத் தேடி அன்னப் பட்சிகளும் எப்படித் தாமாக வருகின்றனவோ, அப்படியே முயற்சியுடன் உயர்ந்த குறிக்கோளை உடையவனைத் தேடி எல்லா இன்பங்களும் தாமகவே வந்து சேருகின்றன" என்று ஜப்பான் பழமொழி கூறுகிறது.

நண்பா, கல்லூரியில் காலடி எடுத்து வைத்திருக்கின்ற நேரத்தில் நீ என்ன குறிக்கோளைக் கொண்டு இருக்கிறாய்? நீ எடுத்திருக்கும் குறிக்கோளின் படிதான் உன்னுடைய வாழ்க்கை அமையமுடியும்! அதனால் உயர்ந்த குறிக்கோளை உன் உள்ளத்திலே விதைத்துவிடு.

நீ எடுத்திருக்கும் குறிக் கோள், உன்னுடைய செயல்களில் வெளிப்படும் பொழுது எல்லா இன்பங்களும் உன்னைத் தேடி, நாடி, ஓடி வரும். உயர்ந்த குறிக் கோளை உள்ளத்தில் கொண்டு முழுமனதுடன் செயலாற்றி சிறப்படைந்திருப்பவர் பலரை நாம் காணவில்லையா?

◦ உயர்ந்த குறிக் கோளைக் கொண்டு இருக்கும் பொழுது பலவித தோல்விகள் நம்மை வந்து அடையத்தான் செய்யும்; இப்படியிருந்தாலும் மன வலிமையுடன் நம்முடைய குறிக் கோளை விட்டு விடக்கூடாது. எத்தனையோ இன்னல்களை ஏற்றுக் கொள்ளவில்லையா?

குறிக்கோள் தான் ஒரு மனிதனை உயர்ந்த இடத்தில் கொண்டு செல்லும் ஆற்றலுடையது. புத்த பெருமானுடைய வாழ்வில்...



துன்பத்திற்குக் காரணம் என்ன என்பதனை அறிய வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளை உள்ளத்திலே கொண்டு அதற்காக பல இன்னல்களை ஏற்றார். அவர் அரண்மனையை விட்டு வெளியே வரும் பொழுது— மஞ்சத்திலே மலர் விழிகள் மூடிக் கிடக்கின்றன; குழந்தையின் மதிவதனத்தைக் கண்டு மதியே சற்று மயங்குகிறது. குழந்தையின் அருகில் மலருடலாள் மல்லாந்து படுத்திருக்கின்றாள்.

www.thamizham.net - Free E Books No TM 14717

பொன் உருக்குமேனி, பூவைப் பழிக்கும் விழியினள் கொவ்வை இதழினள், குயில் மொழியினள், இடை உண்டோ இல்லையோ என்று சந்தேகிக்கும் சிற்றிடை. புன்னகையைத் தன்னகத்தே கொண்டு புன்முறுவலுடன் பூம்பாவை காட்சி அளித்துக் கொண்டு இருக்கிறாள். போதை தரும் பாவைகள் பலர் படுத்திருப்பதையும் காண்கின்றார்.

இத்தனை வகை சிறப்புகளும் அவரை வசிகரித்துக் கொள்ள காத்துக் கிடக்கின்றன. அந்த அரண்மனையிலே காணும் இடமெல்லாம் இன்பம் இருந்தாலும் அதனை அவர் கண்டு கொள்ளாமல் தன்னுடைய குறிக்கோளிலே முழு கவனத்தையும் செலுத்தினார்.

*** ஒளிவு மறைவில்லாமல் பேசுகின்றவன் தனது காலடியில் உலகம் வந்து சரணடைவதைக் காண்பான்.**

குறிக்கோளை குலைத்துவிட எத்தனையோ நிகழ்ச்சிகள் அவருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட போதிலும் அவர் கொண்ட குறிக்கோளை விடவே இல்லை. இப்படி அவர் உறுதியாக இருந்ததின் பயனாக துன்பத்திற்கு காரணம் ஆசையே என்ற அரிய பெரிய உண்மையினை கண்டு பிடித்தார்.

பந்த பாசங்களை அறுத்தெரிந்து பக்குவப்பட்ட மன நிலையோடு நள்ளிரவு என்றும் பாராமல் நலிவு என்றும் நினையாமல் நடந்து நல்லதோர் முடிவை நானிலத்திற்கு அளித்திடும் மட்டும் நடந்து கொண்டே இருந்தார்.

அவர் மட்டும் குறிக்கோளுக்கு முதலிடம் அளிக்காமல் கேளிக்கைக்கு முதலிடம் அளித்திருந்தாரானால் புத்தராகி இருக்க முடியாது. குறிக்கோளின் மூலம் தான் அவர் உயர்ந்த நிலையை அடைய முடிந்தது. வரலாறு இருக்கும் வரை அவருடைய பெயர் இருக்குமே!

துன்பங்களையும் துயரங்களையும் பொறுத்துக் கொண்டு பொறுமை போடு உழைத்து உயர்ந்த குறிக்கோளை வைத்திருந்தவர்கள் தான் ஆடம்ஸ்மித்தும் பார்லிறும், காரல் மார்க்சும் என்றை குறிக்கோள்ளாக வைத்துக் கொண்டால் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் என்ன துயரம் வந்தாலும் விடாமல் செய்து முடித்தே தீர வேண்டும்.

கோப்பானிகஸ் தம் ஆய்வு ஒன்றை முப்பது ஆண்டுகள் நடத்தி வெற்றி பெற்றார். ஹென்றி போர்டு பல தடவை தம்முடைய சோதனையை செய்து இறுதியில் கரை கண்டு பிடித்தார்.

எப்படியும் பொருளாதாரத்தைப் பற்றி எழுதி விடவேண்டும் என்ற குறிக்கோளில் பதினேழு ஆண்டுகள் எழுதி உயர்ந்த இடத்தை அடைந்தார். அந்த புத்தகத்தின் பெயர் "வெல்த் ஆப் நேஷன்" அதை எழுதியவர் ஆடம்ஸ்மித். இதைப் போலவே டார்வின் "ஆரிஜன் ஆப் ஸ்பிஸீஸ்" என்ற நூலை பதினேழு ஆண்டுகளாக எழுதினார். "தாஸ் கேபிடல்" என்ற நூலை எழுத காரல் மார்க்ஸ்க்கு பிடித்த ஆண்டுகள் பதினேழு.

நாட்கள் கடந்து சென்றாலும், குறிக்கோளை அவர்கள் விட்டு விடவில்லை. உயர்ந்த குறிக்கோள் மட்டும் வைத்து விட்டு அதற்காக எவ்வித முயற்சியும் செய்யாமல் உழைக்கவும் செய்யாமல் இருந்தால் கட்டாயம் முன்னேற முடியாது. உயர வேண்டுமானால் குறிக்கோளுடன் முயற்சியும் சேர்த்து உழைக்க வேண்டும்.

www.thamizham.net - Free E Books No TM 14717

## சிறுமிகள் சினிமா எடுக்கிறார்கள்!

* சிறுவர்களால் சினிமாப்படம் எடுக்க முடியுமா என்ற எண்ணம் எட்கார் ரிட்ஜீ என்ற படத்தயாரிப்பாளருக்கு எழுந்தது. உடனே 26 பள்ளிச் சிறுமிகளை ஒன்று திரட்டினார். பிலிம் சுருள்களையும், காமிராவையும் அவர்களிடம் கொடுத்தார். என்ன ஆச்சரியம்! சில வாரங்களுக்குள்ளாகவே 26 துண்டு திரைப்படங்கள் தயாராகி விட்டன. படத்தயாரிப்பு பற்றிய எல்லா பொறுப்புகளும் சிறுமிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பிலிம் சுருள்களை வெட்டி ஒட்டும் 'எடிட்டர்' உதவி மட்டும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது.

(யூ.பி.எஸ்.)

தேங்கிக் கிடக்கும் நீரில் பூச்சிகள் கிடக்கின்றது போல் ஒன்றும் செய்யாத உடலில் சோம்பலும் குடி கொண்டு இருக்கும். சோம்பல் வந்தவுடன் எந்தச் செயலையும் ஒழுங்காக செய்யாமல் தள்ளி போட்டுக் கொண்டே சென்றால் நம்முடைய குறிக்கோளை விட்டு நெடுந்தூரம் போய் விடுவோம். குறிக்கோளை நிறைவேற்ற அவசரப்பட்டு விடாமல் அமைதியாக பொறுமையுடன் செயலாற்ற வேண்டும்.

வாழ்க்கையை உயரச் செய்வது குறிக்கோள்தான்; ஆனால் அந்த குறிக்கோளை மட்டும் மனதில் வைத்திருந்தால் உயர்வடைய முடியாது. குறிக்கோளை நம் மனதில் வைத்து செய்கின்ற செயல்களின் மூலம் நம்முடைய திறனை உபயோகித்து முன்னேற வேண்டும். பசி எடுத்துக் கொண்டு இருக்கும் பொழுது உணவை புசிக்காமல் உணவைப் பார்த்துக் கொண்டே இருந்தால் பசி போய் விடுமா? இதே போல தான்—

வாழ்க்கையை வளமாக ஆக்கி கொள்ள குறிக்கோள் மட்டும் இல்லாமல் அதனை செயல்பட்டு உயர்ந்த இடத்தை அடைய வேண்டும். குறிக்கோளைக் கொன்று விடாமல் சிறந்த பணி செய்து சிறப்படைய வேண்டும்.

* ஒரு ரயில் பெட்டியில், ஒரு மனிதர் தனது பையிலிருந்து சிகரெட்டை எடுத்த வண்ணம், "மன்னிக்க வேண்டும். நான் புகை பிடிக்கலாமா?" என்றார் எதிரில் இருந்தவரிடம். எதிரே இருந்தவர் நல்ல மனிதர். "வீட்டில் என்ன செய்வீர்களோ அது போலவே இங்கும் செய்யுங்கள்" என்றார். "சரி" என்று தொங்கிய முகத்துடன் சிகரெட்டைத் தனது பாக்கெட்டில் திணித்துக் கொண்டார் கேட்டவர்.

—R.D.யிலிருந்து.

www.thamizham.net - Free E Books No TM 14717

# பெயர் வையுங்கள் பார்ப்போம் !

**பங்கேற்போர் :**

சோமசேகர முதலியார்—ஒரு பில்டிங் கண்டிராக்டர்.
காவேரியம்மாள் —முதலியாரின் மனைவி.
ராமு —முதலியாரின் மகன், கல்லூரி மாணவன்
லதா —முதலியாரின் மகள்.
ரவி —முதலியாரின் மருமகன், லதாவின் காதலன்.
ரமா, முரளி —முதலியாரின் கடைக்குட்டிகள்.

## காட்சி—1

இடம் : முதலியார் வீட்டின் பெரிய ஹால்.
பங்கேற்போர் : மேலே சொல்லப்பட்ட அத்தனைப் பேர்களும்.

முதலியார் : என்ன எல்லாரும் வந்தாச்சா?

ராமு : வந்தாச்சு! ஆனா இன்னும் அந்த ரவிப்பயலை மட்டும் காணலை!

முதலி : எங்கே போயிட்டான்? சொல்லியிருந்தேனே!

ராமு : எங்கேயாவது ஊர் சுத்தப் போயிருப்பான்.

லதா : (சீற்றத்துடன்) எல்லாரையும் உன்னைப் போலவே நினைச்சுண்டிருக்கியா?

ராமு : தப்பு! தப்பு!! இனிமே அவனைப் பத்தி ஒண்ணும் சொல்லலை போதுமா? (கன்னத்தில் போட்டுக் கொள்கிறான்)

(இது சமயம் ரவி உள்ளே வருகிறான்).

வாடாப்பா அறுவையர் திலகமே வா! இந்த மேன்மை தங்கிய சபை உன் வரவுக்காகத் தான் காத்திருக்கிறது!

முதலி : ஏம்பா ரவி லேட்டு?

ரவி : அது மாமா வந்து...நீங்க சொன்னீங்களேன்னு தான் சீக்கிரமாக ஆபீசை விட்டு கிளம்பினேன்! ஆனா பாருங்க, வழிலே சிலபேர் பிடிச்சிகிட்டாங்க...

ராமு : ஆமா பெரிய மந்திரி இவரு வழிலே புடிச்சிகிறாங்களாம்...

முதலி : சரி, சரி நிறுத்துங்க...

காவேரி : சரி நீங்க கூப்பிட்டது எதுக்குன்னு சொல்றீங்களா. நான் போயிட்டுமா (என்று சமயலறை இருக்கும் திசையை கை

www.thamizham.net - Free E Books No TM 14717

யில் உள்ள கரண்டியால் காட்டுகிறாள்).

முதலி : அம்மா பரதேவதை ! கோவிச்சுக்காதடி ... இதோ சொல்லிடறேன். (இது சமயம் அவரது கடைக்குட்டி ரமாவும் முரளியும் உள்ளே வர) என்னடா இதுகள் வேற வந்துடுத்துகள்...

முரளி : என்னதிது? எல்லாரும் இங்கே கூடிகிட்டு என்ன பண்றீங்க? எங்களையெல்லாம் கூப்பிடவேயில்லையே!

லதா : அது ஒண்ணுமில்லம்மா!

ரமா : அங்கே ரவி அத்தான் கூட இவ ஏதோ பேசிண்டிருந்தா..

லதா : ஏய்! லூஸ் வாயை மூடு

ரமா : நாறு லூஸு! நீ லூஸு! உங்க அத்தான் லூஸு...

லதா : என்னடி சொன்னு?

ராமு : அப்பாடி! நல்ல வேளை அண்ணன் லூஸுன்னு சொல்லலை

ரவி : ம்ம்... அது சொல்லித்தான் தெரியணுமாக்கும்...



லதா : வாடா வாலு, இங்கேயும் வந்துட்டியா!

முரளி : நீ என்னக்கா எங்கே வந்தாலும் இப்படியே சொல்றியே ! நேத்து தோட்டத்துக்கு வந்த போதும் இப்படித்தான் சொல்லி விரட்டிட்டே

காவேரி : ஏண்டி விரட்டினே...?

ராமு : என்னடா சொன்னே ?

முதலி : ஒண்ணுமில்லே... நீ ரொம்ப எக்ஸ்பீரியன்ஸ்டுன்னு சொல்றான்.

லதா : அப்படி சொல்லுங்க... வெர்ரிகுட்...

ராமு : இந்த பாராட்டு ரவிக்கா? அப்பாவுக்கா?

www.thamizham.net - Free E Books No TM 14717

லதா : ஏண்டா குறுக்கே பேசறே? நான் யாரைப் பாராட்டினு உனக்கென்னடா?

காவேரி : சரி, சரி... நீங்க சண்டையைப் போட்டு முடிங்க நான் அப்புறம் வரேன்... (உள்ளே போகத் திரும்புகிறுள்)

முதலி : யம்மாடி... யம்மாடி.. கொஞ்சம் இரு, சொல்லிடுறேன்...
டேய் யாரும் சத்தம் போடாதீங்க...

ரவி : சீக்கிரம் சொல்லுங்க மாமா...

ராமு : ஏண்டா எதாவது புரோகிராமா? லதா சொல்லவேயில்லையே?

முதலி : நீங்கள்ளாம் நல்லா சிந்தனை பண்ற மாதிரி ஒரு சின்ன விஷயம் சொல்லப் போகிறேன்...

ரமா, முர : போர்......போர்

ராமு : ஒன்ஸ் மோர்...மோர்...

முதலி : ஷட் அப்! நான் ஒரு 'இது'க்கு புதுசா ஒரு நல்ல பேரா வைக்கணும்னு இருக்கேன். 'அது'க்கு நீங்களே ஒரு நல்ல பேரை யோசிச்சு செலக்ட் பண்ணி சொல்லுங்க.

ரவி : சரி மாமா ஆனு அந்த 'இது' என்னதுன்னு சொல்லலையே?

முதலி : அதான் சொன்னேனே 'அது' என்னதுன்னு 'திங்க்' பண்ணி பிறகு 'அது'க்கு நல்ல பேரும் 'சூஸ்' பண்ணுங்க.

காவேரி : இவ்வளவு தானே நான் போகட்டுமா?

முதலி : (புன்னகையுடன்) காவேரி ஞாபகம் வைச்சுக்கோ! இதுக்கு ஒரு பிரைஸ் உண்டு.

காவேரி : பரிசு என்ன?

முதலி : (மீண்டும் புன்னகை) நீ என்ன இஷ்டப்பட்றியோ அது.

முரளி : ஐய்யய்யே! அப்பா அழுகுணி அடிக்கிறுர். சிரிக்கிறுர். நமக்கு தெரியுமா அம்மாவுக்கு மட்டும் சொல்லிடுவார்!

ராமு : மாட்டார்டா! ஏன்னு அம்மா கேக்கற பிரைஸ் ரொம்ப 'காஸ்ட்லி'யா இருக்கும்.

காவேரி : சரி தான் சும்மாயிருடா

(எல்லோரும் போகிறுர்கள்).

## கம்பியூட்டரின் ஜோசியம்!

* ஜெர்மனியில் ஒரு பலசரக்குக் கடையில் ஒரு கம்பியூட்டரை நிறுவியிருக்கிறுர்கள். இதற்குள் 5 ரூபாயை செலுத்தி பிறந்த தேதியைச் சொன்னுல் போதும். நீங்கள் எப்படிப்பட்டவர், எதிர்காலப்பலன் என்ன என்பதை 40 வரிகளில் அச்சிட்டு தந்து விடுகிறது 'கம்பியூட்டர்' இப்படி ஜோசியம் கேட்க தினம் 500க்கும் அதிகமான மக்கள் 'கியூ' வரிசையில் நிற்கிறுர்கள்.

www.thamizham.net - Free E Books No TM 14717

## காட்சி—2

இடம் : ராமுவின் அறை.

ராமு யோசனையில் இருக்க, லதா உள்ளே நுழைகிருள்.

லதா : என்னடா ராமு யோசனை பலமாயிருக்கே?

ராமு : நாந்தான் 'வீக்'கா இருக்கேன். யோசனையாவது பலமா இருக்கட்டுமே! அது சரி அந்த 'இது' என்னன்னு கண்டு பிடிச்சுட்டியா?

லதா : ஏன் உனக்கு ஒண்ணும் தோணலையா?

ராமு : அப்படியில்லே தோணும்! கொஞ்சம் லேட்டாகும்! உனக்கப்புறம் பொறந்தவன் தானே! சரி சொல்லு 'அது' என்ன?

லதா : விஷயமே 'அது'லே தான் இருக்கு...

ராமு : அதான் தெரியுமே! விஷயத்தைச் சொல்லு?

லதா : காலையிலே நம்ப சிங்காரம் முதலியார் வந்திருந்தார்...

ராமு : யாரு? 'ஸ்கார்ப்' அளவிலே ரவிக்கைத் துண்டு விக்கிருரே அவரா?

லதா : இப்படியல்லாம் ஏடா கூடமா பேசிஞ் நான் சொல்ல மாட்டேன்.

ராமு : சரி சரி தப்பு...சொல்லு..

லதா : அவரு காலையிலே அப்பா கிட்டே ரொம்ப நேரம் அதைப்பத்தி பேசிகிட்டிருந்தாரு...

ராமு : எதைப்பத்தி?

லதா : அவருடைய 'டெக்ஸ்டைல்லே' புது டிபார்ட்மண்ட்' ஸ்டோர் ஆரம்பிக்கப் போருரே; அதுக்கு புதுசா ஒரு பேரு வேணுமோ என்னமோ?

ராமு : உண்மையிலே அதான் இருக்கும்னு நினைக்கிறியா!

லதா : ஆமா! நான் ஒரு 'அல்ட்ரா மாடர்ன் நேம்' செலக்ட் பண்ணி பிரைஸ் அடிச்சுகிட்டு போயிடுவேன்.

ராமு : 'அது' என்னது தெரியுமா? நீ சொன்னதில்லே,

லதா : சரி நீ தான் சொல்லேன்.

---

✲ தனது அறிவுரைகளை பிள்ளைகள் மதிப்பதில்லையே என்று தந்தைமார்கள் மனம் தளர வேண்டாம்; அவை பயனில்லாமல் போகாது; சில ஆண்டுகளுக்குப் பிறகு பிள்ளைகளே தங்களது பிள்ளைகளுக்கு அவற்றை வழங்குவார்கள்.

---

ராமு : அப்பா 'காண்டிராக்ட்லே' இப்போ முடியப் போற கட்டிடம் என்னது தெரியுமோ?

லதா : தெரியுமே! மவுண்ட் ரோடிலே கட்டியிருக்கிற தியேட்டர்.

ராமு : அந்த தியேட்டர் ஓனர் அப்பாவுக்கு ரொம்ப 'தோஸ்து' அதனுலே, அதுக்கு என்ன பேரு வைக்கலாம்னு கேட்டிருப்பார். அப்பாவுக்குத் தான் சட்டுன்னு ஒண்ணும் ஐடியாவே வராதே ......அதனுலே நம்பளை கேக்கருர்...

லதா : அப்படியெல்லாம் இருக்காதுடா?

ராமு : அது அப்படித்தான் பாரேன். நான் ஒரு நல்ல பிரைஸ் கேட்டு வாங்கிடறேன்...

லதா : என்ன கேப்ப? முதல் 'ஷோ'வுக்கு டிக்கட்டா?

ராமு : என்னையே வார்றதா நெனைப்பா? சரி, சரி நான் போய் அம்மாவை யும் ரவியையும் பார்த்துட்டு வர்றேன்.

## காட்சி—3

ராமு : என்னம்மா 'பதி'க்கு எதிரா 'சதி' நடக்குதா ?

காவேரி : எல்லாம் அந்த 'இது'க்கு என்ன பேரு வைக்கலாம்னுதான்......

ராமு : சரி அந்த 'இது' என்னன்னு கண்டு பிடிச்சுட்டியா?

காவேரி : அது ஒண்ணுமில்லடா. யோசிச்சா கண்டுபிடிச்சுடலாம்...

ராமு : இதைத் கண்டு பிடிக்கறதுக்கே உனக்கு இவ்வளவு நேரமா?

காவேரி : நம்ப சிங்காரம் மாமா தறி போட்டிருக்கிற புது புடவைக்கு நல்ல பேரா பேட்டிருப்பார்...

ராமு : பொம்பளைங்க புத்தியை காமிக்கிறியே?

முரளி : அண்ணு அம்மா சொல்றது தப்பு! 'அது' ஒரு நாய்க்குட்டி...
(இது சமயம் ரவி உள்ளே வருகிருன்.)

ராமு : வாடாப்பா செல்லக் குட்டி! குறுக்கே போன தெய்வம் கும்பிடவந்த மாதிரி... இல்லேயில்லே கும்பிடப்போன தெய்வம் மாதிரி குறுக்குலேயே வந்துட்டியே! என்ன கண்டு பிடிச்சுட்டியா?

ரவி : 'அது' என்ன தெரியுமா? மாமா புதுசா ஒரு பேர்லே இன்னெரு கம்பெனி ஆரம்பிக்கபோருர் இன்கம் டாக்ஸ் அட்ஜஸ்ட்மெண்ட்டுக்காக... அந்த கம்பெனிக்கு வேண்டிய பேராயிருக்கும்......நான் 'நியூமராலஜியிலே' பாத்துவைக்கிறேம் சூஸ் பண்ணியிருக்கேன்.

---

* பணம் இல்லாதவர்கள், பணம் இருந்தால் அதனை எப்படி உபயோகிப்பார்களோ, அப்படியே பணம் படைத்தவர்கள் அதனை உபயோகித்தார்களாஞல் வாழ்க்கை எவ்வளவு இன்பமாக இருக்கும்.

---

www.thamizham.net - Free E Books No TM 14717

(இது சமயம் முதலியா ரும் கீதாவும் உள்ளே நுழைய சமையலறை, அசெம்பிளியாகிறது).

முதலி : கண்டு பிடிச்சுட்டீங்களா? எல்லோரும் துண்டு பேப்பர்லே எழுதிக்கொடுங்க. (எல்லோரும் அவரவர் கள் நினைத்ததை எழுதி கொடுக்க அதை அவர் படிக்க அவர் முகம் மாற அதைக் கண்டு அனைவர் முகமும் மாறுகின்றது).

முதலி : எல்லாருக்கும் ஒரே மார்க்தான். ஆமா 'ஜீரோ' தான் 'அது' என்னது தெரியுமா?

எல்லோரும்: என்ன? என்ன?

முதலி : நீங்க நினைச்சது எதுவுமே இல்லே நான் செகண்ட் ஹேண்டிலே வாங்கிருக்கிற லாரிதான்! அந்த 'பிரிக்' லாரிக்கு ஒரு நல்ல பேர் வைக்கலாம்னுதான் கேட்டேன்.

எல்லோ : ஹைய்யய்யோ! (மயங்கி விழ முதலியார் நீரெடுக்க ஓடுகிறார்).

எழுதியவர்
—பார்த்தசாரதி


LEADING BOOK SELLERS FOR SCHOOLS, & COLLEGES

**THIRUMALAI STORES**

(OPPOSITE - PANAGALPARK)

6, NAGESWARA RAO ROAD,

T. NAGAR, MADRAS-17.

*PHONE: 441088*


* உலகை இரண்டே இரண்டு பேராற்றல்கள் தான் ஆள்கின்றன. ஒன்று வாள், மற்றொன்று எழுதுகோள். இவற்றிடையே ஏற்படும் போட்டிகளில் எப்போதும் முன்னதை, பின்னதுதான் இறுதியில் வென்று விடுகிறது.

—மாவீரன் நெப்போலியன்

www.thamizham.net - Free E Books No TM 14717

"ஒரு வலிந்த மொழி தன்பழம் பெருமையையும் பண்பாட்டையும் கைவிட்டுத் தன்னைப் பேசுவோரது கவனக் குறைவாலும் அறியாமையாலும், சீரழிதலும் தாழ்வுறுதலும், மொழித் தூய்மை கெடப்பெறுதலும் காட்டு மிராண்டித் தனத்திற்கு ஒழுவிச் செல்து ஆகும்" [Harold Wheeler's children's dictionary Vol.1]. இதை நோக்கு கையில் இன்று இதன்வழி தமிழ் ஒரு காட்டு மிராண்டி மொழியாக மாறிக் கொண்டு வருகின்றது என்பது நமக்காழ்ந்த துன்பத்தைக் கூர்முள்ளாய் குத்துவாய் உள்ளது! ஏன்! தமிழுலகப் பெரியார் ஒருவர் புகன்றபடி நம் தமிழ் ஒரு காட்டு மிராண்டி மொழி என்பது உண்மை தான். ஆனால் மேலே கூறியபடி அல்ல! கீழே நோக்குங்கள்! விளங்கப் பெறுவீர்!

Page 14 76]. அது பழைய கற்காலம் என்று வரலாற்றில் குறிக்கப் பெறும். அவன் நெடுங்காலம் விலங்கோடு விலங்காய்த் திரிந்து அதன் பின் உணர்வு வரப்பெற்றுத் தனக்குள் சில உணர் வொலிகளை எழுப்பினான்! இந்நிலையில் தான் அவன் கூட்டத்துள் சிலர் பலவாறு சிதைந்து உலகின் பல பகுதிகளுக்குச் சென்று வாழத் தொடங்கினர். பழங்கற் காலத்தவனுகக் கருதப்படும் மாந்தன் எலும்புக் கூடுகள், கருவிகள் பல விடங்களிலே காணப்படுதலே இதற்குச் சான்றாகும். சர் ஜான் ஈவன்ஸ் என்னும் நிலவியலறிஞர் "அவ்வாறு காணப்படும் எலும்புக் கூடுகளுள் தென்னிந்தியப் பகுதிகளில் கிடைப்பவைற்றையே மிகப் பழமை வாய்ந்த தெனக் கூறலாம் என்கிறார். ஆகவே தென்னிந்தியாவை உள்ளடக்கிய குமரிநாடே

# தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழியா?

## மனிதன் தோன்றிய முதல் இடம் :

உலகம் தோன்றிய 200 கோடி ஆண்டுகளில், உயிர் தோன்றி வளர்ந்து மாந்த உருவெய்தி ஏறத் தாழ 20 இலட்சம் ஆண்டுகள் ஆகின்றன. மாந்தன் ஒரளவு திருத்தம் பெற்று காட்டு விலங்குகளில் ஒன்றாய், காட்டு மிராண்டியாகவே வாழ்ந்து வந்ததும் இக்காலக் குமரிக் கடலெனப் பரவி நிற்பதும். அக்கால், கிழக் காப்பிரிக்கா, ஆஸ்திரேலியா சாவா, சுமத்திரா முதலிய பெரு நிலங்களை இணைத்து நின்றதுமான. குமரிக் கண்டத்திலேயே என்பர் அறிஞர்

(1 Geology of India. Chapter IX.
(2 Out line of History. H.G. Wells

மாந்த இனத்தின் தொட்டில் என்று திட்டமாய்க் கூறலாம்.


**முதல் உலக மொழி :** அன்றைய கற்கால மாந்தனின் உணர்வொலிகளும் குறிப்பொலிகளுமே அதன் பின் ஏறத்தாழ — 50.000 ஆண்டுகளுக்கு முன் பழந்தமிழாய் மலர்ந்து நின்றது! அம்முழுமை பெற முதல் தாய் மொழிகளுக்கு மூல ஒலிகளால் நின்ற குறிப்பொலிகளே, குமரிக் கண்ட மாந்தனின்றும் பிரிந்து சென்ற ஆசியா, கிழக்குத் தீவுகள், அமெரிக்கா. ஆஸ்திரேலியா முதலிய பெரு நிலப் பரப்புகளில் நின்று தோன்றி வளர்ந்து நின்ற மக்கள் கூட்டத்தினரின் மொழிகளாக விரிவு பெற்றன. யூப்பிரடீசு, டைகரிசு

www.thamizham.net - Free E Books No TM 14717

ஆற்றுப்படுகை நிலமான சுமேரியாவிலும் வழங்கிய மொழி தமிழ் போன்றதொரு மொழியே! பழைய அமெரிக்க மொழி பழந்தமிழ் மொழியோடு மிகவும் ஒற்றுமையோடு இருந்தது [Origin and antiquity of man—FREDRICK WRIGHTS.]

## முதல் காட்டு மிராண்டி !

பழைய கற்காலத் தமிழர்களே உலகத்தின் முதற் காட்டுமிராண்டிகள். அவர்கள் காட்டுமிராண்டிகளாக இருந்த பொழுதே தோன்றிய மொழி தமிழ் ஆகலின் அஃது ஒன்றே முதற் காட்டுமிராண்டி மொழியெனக் கொள்ளப்படும் பெருமை வாய்ந்தது! அக்கை அக்காள், முதலிய உறவுச் சொற்கள் பின்னிய மொழியில் [Finland] காணப்படுகின்றன என்றும், பழைய ஏற்பாட்டில் ஆபிரகாமின் தந்தை தேராகு



வாழ்ந்த நகர், ஊர் என்னும் தமிழ்ப் பெயரால் குறிக்கப் பெறுகின்றது என்பதும் அதில் வாழ்ந்தவர் ஊரியர் என்றும் அதுவே பிற்காலத்தில் ஆரியமாக மாறியது என்பதும் நற்றமிழன் அறிய வேண்டிய செய்திகள்! தமிழரின் ஞாயிறு வணக்கமே உலகம் எங்ஙனம் பரவிகிடந்தது. ஏசுநாதருக்கு முந்திய யோவான் உயர்த்திச் சென்ற சிலுவைக் கொடியும் உண்மையான சூரியக் கொடியே ஆகும். [ஆ-ம் முதல் தாய்மொழி —தேவணேயப் பாவாணர்.]

இனி தமிழ், மாந்தன் காட்டுமிராண்டியாய் இருந்த கால்த்தில் தோன்றிய தாயின் தமிழ் மக்களுக்கு அன்றிருந்து மலையன், வெற்பன், காடன், நாடன், குன்றன், பழையன், களிறன், புலியன், வேடன், மல்லன் போன்ற இடம். விலங்கு. மாவலி குறித்த பெயர்கள் தோன்றலாயின! ஆகவே உலகில் முதல் மாந்தன் தமிழனே! முதல் குடியும் தமிழ்க் குடியே! என்பதற்கு இதனைவிட வேறு சிறந்த அகச்சான்று வேண்டுமா?

நன்றி :
தென்மொழி

## சிசுவின் இதயத் துடிப்பு!

* தாயின் வயிற்றுக்குள்ளிருக்கும் குழந்தையின் இதயத் துடிப்பை அறிய பிரிட்டிஷ் நிபுணர்கள் ஒரு அதிசயக் கருவி கண்டு பிடித்துள்ளனர். தாய் கருத்தரித்த 14-வது வாரத்திலிருந்தே, வயிற்றில் உள்ள சிசுவின் இதயத்துடிப்பை அறியலாம். கருவியை தாயின் உடலுக்குள் செலுத்த வேண்டாம். புறத்தில் வைத்தே, சிசுவின் இதயத்துடிப்பு ஒலியை இக்கருவி பதிவு செய்துவிடும்.

www.thamizham.net - Free E Books No TM 14717

# நிலவில் இறங்கியதும் நடக்கப் போவது என்ன?

ஜூலை-16ம் தேதி காலை கென்னடி முனையிலிருந்து விண்வெளி விமானிகள் நீல் ஆம்ஸ்ட்ராங், மைக்கல் காலின்ஸ், எட்வின் ஆல்டிரின மூவரும் கிளம்புகிறார்கள்.

ஜூலை 21-ம் தேதி முதலில் நிலா வாகனத்திலிருந்து நிலவில் கால் வைக்கும் முதல் மனிதர் நீல்.ஏ. ஆம்ஸ்ட்ராங்.

அம்புலியில் இறங்குவதற்குவேண்டிய ஏணி ஒன்று நிலா வாகனத்தில் பொருத்தப் பட்டிருக்கும் ஏணியின் கடைசிப் படியின் முந்திய படியில் ஆம்ஸ்ட்ராங் நின்றுகொண்டு, நிலா வாகனத்தின் கருவிப்பகுதியில் தொங்கும் ஒரு வளையத்தை எட்டிப் பிடிப்பார். அதனை அவர் இழுத்ததும் கருவிப்பகுதி திறந்து கொள்ளும். டெலிவிஷன் காமரா வெளியே தெரியும். அது உடனே இயங்கவும் தொடங்கும்.

ஆம்ஸ்ட்ராங், ஏணிப்படியின் வழியாக இறங்கி வந்து முதன் முதலில் நிலா வாகனத்தின் கால்வட்டு ஒன்றின் மீது அடியெடுத்து வைப்பார். பிறகு அம்புலியின் மீதே அடியெடுத்து வைப்பார்.

ஜூலை 21-திங்கட்கிழமை காலை 11.42 (இந்திய நேரம்) ஈடு இணையற்ற இந் நிகழ்ச்சி நடைபெறும்.

அரை மணிக்குப் பின் ஆல்டிரினும் வெளியேறித் தரையில் இறங்குகிறார். இருவரும் நடக்கிறார்கள். நிலாத் தரையிலிருந்து 50 ராத்தல் கல் வகைகளைப் பெயர்த் தெடுத்துக் கொள்கிறார்கள்.

தகவல் கோள்கள் வழியாக உலகம் முழுவதும் டெலிஷன் அஞ்சல் நடைபெறப் போகிறது இதனால் இரண்டரை லட்சம் மைலுக்கப்பால் இவ் வீரர்கள் அம்புலியில் செய்யும் பணிகளை உலக மெங்கும் கோடிக் கணக்கான மக்கள் டெலிவிஷனில் பார்ப்பார்கள்.

22 மணி நேரம் நிலவில் தங்குகிறார்கள். ஆனால் அதில் 19 மணி நேரம் நிலா வாகனத்துக்குள்ளேயே இருக்க வேண்டும்.

நிலவை விட்டுத் திரும்பும் போது காமரா அம்புலியிலேயே விட்டு வைக்கப்படும். இதனால் விண்வெளி விமானிகள், நிலவிலிருந்து கிளம்பி, தம் நிலா வாகனத்தை அம்புலியைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கும் தாய்க்கப்பலுடன் இணைத்துக் கொள்ளும் வரை டெலிவிஷன் அஞ்சல் இடையறாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

அம்புலியில் வெளிச்சம் டெலிவிஷன் அஞ்சலுக்கு மிக அனுகூலமாக இருக்குமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஜூலை 24-ம்தேதி கிரீன்விச் நேரப்படி 16.53க்கு பசிபிக் கடலில் இறங்குகிறார்கள்.

www.thamizham.net - Free E Books No TM 14717

Grams : "MACSALT"

Telephone :
Office : 255 & 1055,
Fact : 455.

# MACHADO SALT

RENOWNED FOR HIGHEST STANDARD
OF PURITY AND OVER 98% NACL.
CONTENTS SPECIALLY PRODUCE BY

## MACHADO SALT FACTORY

TO DEVELOPMENT OF NATION'S
ALKALI INDUSTRY

*For your requirements, please contact :-*

**C. MARTINAMMAL MACHADO**

**&**

**JANEAMMAL VILLAVARAYER**

*9, MANAL STREET,*

**TUTICORIN-1.**

www.thamizham.net - Free E Books No TM 14717

பி. நீலகண்டன், மேட்டூர்.

1. கல்லூரியில் அட்மிஷன் கிடைப்பது மிகவும் கஷ்டமாகி வருகிறதே!

இலவச பி.யு.சி. 'படிப்பு ஒரு காரணமாக இருக்கலாம்.

எஸ். எஸ். எல். சியில் மார்க்கை அள்ளிவிட்டதாக சொல்கிருர்கள்.

முன்னை விட இப்போதெல்லாம் அதிகமாக பதவியும் பணமும் மோதுகின்றன.

எல். பார்த்தசாரதி, சென்னை.

2. போயும் போயும் ஒரு ரிக்ஷாகாரனையா பேட்டி காண்பது! வேறு யாரும் கிடைக்கவில்லையா?

உங்களைத்தான் தேடினேம் —நீங்கள். கிடைக்கவில்லை வேறு வழி?

வாழ்க்கையின் அடித்தளத்தில் இருந்து கொண்டு உலகத்தைப் புரிந்து கொள்ளாத ஒரு ஜீவனை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா?

உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகள்.

## உங்கள் கேள்விகளுக்கு பூச்செண்டின் மூவர் பதிலளிக்கின்றனர்

அ. பஞ்சாபிகேசன், தஞ்சாவூர்

3. எனக்கு பசி அதிகமாக இருக்கிறது. ஆனல் எங்கும் சாப்பிட பிடிக்கவில்லை. என்ன செய்யலாம்?

ஒகோ! என்னைப்போல நீங்களும் ஒரு ஓட்டல் கிராக்கி போல இருக்கிறது.

உங்கள் கையே உங்களுக்கு உதவுமே.

உங்களது பெற்றேரின் முகவரியைத் தாருங்கள். 'வழி' பண்ணுகிறேம்.

கே. லட்சுமி, சென்னை-33

4. மறைந்த ஏர்மார்ஷல் ராஜாராம் ஒரு தமிழரா?

ஆம்! தமிழர்தான்.

சென்ற பாகிஸ்தான் போரிலே, வெற்றிக் கொடி நாட்டிய ஒரு வீரத் தமிழர் இவர்.

அவரது இழப்பினல் தமிழகம் ஒரு தலைமகனை இழந்து விட்டது.

www.thamizham.net - Free E Books No TM 14717

ஆர். முத்து குமாரசாமி,
வடிவீஸ்வரம்.

5. ஜெய்சங்கர் மணந்து கொண்ட மாணவி எந்தக் கல்லூரியைச் சேர்ந்தவர்?

சென்னை எதிராஜ் மகளிர் கல்லூரி.

தற்போது வாழ்க்கை என்னும் கல்லூரியில் புகுமுக வகுப்பு மாணவி.

பாருங்கள்! அங்கும் மாணவிக்குத்தான் சீசன்.

வடிவேலன், சேலம்.

6. உலகத்தின் மிக அழகிய பொருள் எது?

நிச்சயமாக என் முகமும் உங்கள் முகமும்-இருக்கமுடியாது!

குழந்தை உள்ளம்.

'பூச்செண்டு' என்னைப் பொறுத்தவரை.

அப்துல்காதர், நாகப்பட்டிணம்.

7. ரிக்ஷாகாரனை கேட்டீர்கள் உங்களைக் கேட்கிறேன்: ஜாகிர் உசேன் யார்?

நீர் யார் என்னைக் கேட்க? சொல்ல முடியாது.

ஆசிரியராய் இருந்து இந்தியாவிலேயே உயர்ந்த பதவியை எய்திய நல்லவர்.

இறந்தும் நம் உள்ளத்தில் இறக்காமல் இருப்பவர்.

சி. ராமன், திருச்சி-2

8. மிஸ்ஸஸ் பிளாசம் என்ற ஆங்கிலப் படத்தில் நமது தேசிய கொடியை ப்ரேசியராக தைத்துப் போட்டிருக்கிறார்களே!

கொடுமை! கொடுமை!

நம் நாட்டின் கொடியை மட்டுமல்ல, பல நாட்டு கொடிகளையும் இப்படி செய்திருப்பதாக ஒரு நண்பர் சொன்னார்.

பத்தோடு ஒன்று பதினொன்று என்று தணிக்கையாளர்கள் விட்டு விட்டார்கள்.

என். பாலன், சென்னை.

9. உங்களில் யாருக்குமே திருமணம் ஆகவில்லையா!

இல்லவே இல்லை!

நாங்கள் மாட்டிக் கொள்வதில் உங்களுக்கு என்ன திருப்தி?

மாணவர்களை கேட்க வேண்டிய கேள்வியா இது?

---

* வாசக அன்பர்களே! நாங்கள் விளையாட்டாக அளிக்கும் பதில்களை நீங்களும் தயவு செய்து விளையாட்டா எடுத்துக் கொள்ளுங்கள். யாரையும் புண்படுத்துவது எங்கள் நோக்கமல்ல.

---

www.thamizham.net - Free E Books No TM 14717

# ஒரு நிமிடத்தில் படித்து பல நிமிடங்கள் சிந்திக்க வேண்டிய கதை !

தா. வளன்
வெட்டி வயல்.

ஓர் நாள் மாலை நேரம். செங்கதிரோன் தன் கிரணக் கைகளை சுருட்டி மடக்கித் தன் தலைக்கு தலையணியாக வைத்துப் படுக்க வேண்டிய தருணம்...ஆம் அந்நேரம் தான் கல்லூரியிலிருந்து வீட்டுக்கு வருகிறேன். இடையில் ஓர் மாந்தோப்பு. நான் அன்று கல்லூரியில் தமிழ் பேராசிரியர் விளக்கிய "குறிஞ்சிப்பாட்டின்" தலைவன் தலைவியைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டு சைக்கிளில் வந்தேன். "கூக் கூக்" என்ற ஓர் சத்தம். சைக்கிளை விட்டு இறங்கினேன். நான் இருந்த இடத்திற்கு தெற்கே ஓர் மூலையில் மாமரத்தில் ஓர் கருங்குயில் "கூக் கூக்" என்று கத்துவதை கண்ணுற்றேன். அச்சத்தம் ஓர் சோகத்தை எனக்கு அறிவுறுத்தியது. நான் கிட்ட நெருங்கினேன். அக்குயில் அவ்விடத்தை விட்டகலவில்லை. குயிலின் பக்கமாக மெதுவாக, பையப்பையச் சென்றேன். குயில் என்னைக் கண்டதும் நாணிக் கோணியது. எட்டிப் பிடித்தேன். "கூக் கூக்" என்று கத்தியது. "என்னைப் (குயில்) பிடிக்காதே" என்று அது சொல்வது போல் அச்சத்தமிருந்தது. நான் குயிலை அன்போடு கேட்டேன். குயில் வாயைக் கூட அசைக்கவில்லை முதலில். மீண்டும் குயிலே...குயிலே ஏன் என்று சொல்லமாட்டாயா என்று கேட்டேன். குயில் ஓரிரு வார்த்தைகள் பேசினது. அதாவது "என் குரலினிமையைக் கேட்டும் மக்கள் "ஏய் கருங்குயிலே" என்று அழைக்கின்றனர். நான் வெளி உலகுக்கு கருப்பாயிருக்கிறேன் ஆனால் என் (உள்) குணத்தை, குரலினிமையை அறியார். ஆனால் என்னைப் பழிக்கும் மனிதர்களோ எனக்கு நேர் விரோதமாயிருக்கிறார்கள்" என்று மட்டும் சொன்னது. உடனே என் அடி மூளையை ஓர் சுத்தியால் தாக்கினது போலிருந்தது. ஒரு நிமிடம் மௌனமானேன். குயிலைக் கைப்பிடியிலிருந்து நழுவ விட்டேன். சிந்தித்தேன். குயில் சொன்ன வார்த்தையின் பொருளைச் சிந்தித்தேன். அட! மனிதா. நீ வெளி உலகுக்கு வெள்ளிக் கட்டாய், வெள்ளை உள்ளம் கொண்டவனாய் இருக்கிறாய். ஆனால் அந்தரங்க வாழ்வில் நீ செய்யும் அட்டூழியம், பொய், சூது, வாது, காமம், எத்தனை துரோகங்கள். ஆனால் உனக்கு மக்களிடையே "நல்ல பெயர்" உனக்கு நேர்மாறாய் நடப்பவனுக்கு கெட்ட பெயர்" என்று தெளிந்தேன் சுற்றும் முற்றும் பார்த்தேன். நான் குயிலைக் காணவில்லை. குயில் மாயமாய் மறைந்து விட்டது. அந்தோ! குயில் !!

www.thamizham.net - Free E Books No TM 14717

## GIVE US THE PLEASURE OF SERVING YOU THE LARGEST AND MOST COMPREHENSIVE RANGE OF DIESEL PARTS UNDER ONE ROOF !!!

**Service Departments :**

Fuel Injection : Calibration of Fuel Injection pumps reconditioning of injectors

Electrical : Electrical Starters Dynamos, Magnetos and rewinding of Motors

Mechanical Engineering : Servicing of Industrial Plant and Equipment

**Manufacturing Lines :**

"*DVD*" Fuel Injection Pipes

"*DVD*" Carbon Brushes

"*DVD*" Field Coils

"DVD" Governor Diaphragm

"DVD" Nozzle Testers

"DVD" Fuel Injection Components

### AGENTS

"PIONEER" 'O' RINGS, Oils Seals & Synthetic Packings

( A FENNER COCKILL PRODUCT )

# THE INDIAN ENGINERING & TRADING COMPANY

(ESTABLISHED 1949)

*15, WALLERS ROAD, MADRAS*

Telephone : 88761/88762

Telegram : FUELPUMP

Factory :

VYASARPADI

Branches :

BANGALORE

HYDERABAD


www.thamizham.net - Free E Books No TM 14717

## அத்தியாயம் 11

அந்த வீடு கட்டிய பிறகு, முக்கியமான, முதல் விழா அது. இரண்டாவது குழந்தையே ஆனாலும், அவன் தன் நிலையில் உயர்ந்து வந்த பிறகு நண்பர்களும் உறவினர்களும் வந்து பார்க்க அந்த ஒரு சந்தர்ப்பம் தான் அப்போதைக்குக் கிடைத்தது.

நளினா குழந்தையின் பெயர் சூட்டு விழாவுக்கு வெறும் விருந்தாளியாக வரவில்லை. தானே அந்த வீட்டு மனிதர்களுள் ஒருத்தியாய் இருந்து வருவோரை வா என்றும் போவோரை இரு என்றும் சொல்லி சிரிப்பும் கேளிக்கையும் சலித்த இடத்தில் தான் புகுந்து முட்டிக் கொடுத்து மறுபடி மூட்டி விட்டு அங்கும் இங்கும் மொனப்பம்பரமாய் அலைந்து கொண்டிருந்தாள்.

சுந்தரத்தின் உறவினர்கள் சற்று வயதானவர்கள் மூக்கின் மேல் சரிந்த கண்ணாடி மேல் எட்டிப் பார்த்தபடி "யார் அந்தக் குட்டி? நாம் செய்ய வேண்டிய உபசாரங்களை எல்லாம் அவள் செய்கிறாள் போல இருக்கிறதே?" என்று வியப்போடு கேட்டார்கள்.

"அது தான் நளினா. புது திரை உலக நட்சத்திரம்—"

"நளினா! பெயருக்கு ஏற்றபடி தான் இருக்கிறாள் குளு குளுன்னு! மெத்து மெத்தென்று பேசிச்சிரித்துக் கொண்டு. நம்ப பெண்கள் கத்துக்க வேணும்".

அவள் எந்த மூலையில் நின்றாலும் சுந்தரத்தின் கண்களுக்கும் அவள் உருவம் மட்டும் தான் தெரிந்து கொண்டிருந்தது. அமைப்பில் உயரும் முகம்; நடுவகிடின் இரு மருங்கிலும் வங்கி வங்கியாய் படிந்த கூந்தல்; நெற்றி மேட்டில் விளையாடும் கூந்தல்துளிர்; சுடராய் எழும் சிவப்புச் சாந்து; கத்திப்பிடி போல் காதுவரை நெடிய மைக்கீற்று; பூச்சிரிப்பு ஒளிரும் விழிகள்; பளீர் வெண்மையில் மின்னும் சிரிப்பு.

ஏதேனும் காரியமாய் எதற்கேனும் அழைப்பாய், அவளைப் பெயர் சொல்லிக் கூப்பிடும் போதெல்லாம், அவனுள் அந்தப் பெயர் புது நாதத்துடன் செவியின் உள்திரையில் அலைமோதிற்று. கட்டியவெள்ளி மணிகள் அசையக் கிணு கிணுப்புடன் திறக்கும்சிற்பக் கதவைப் போல. அவள் அருகே வரும் நேரம் எல்லாம், அவனுள் மகிழ்ச்சி பொங்கும் மடை ஒன்று திறந்து வெள்ளம் பெறுகிற்று

அவன் உரிமையுடன் அழைக்கும் குரலைக்கேட்ட போது அந்தப் புதுப் பார்வை மேலே படும் போது, அவள் செயலிலும் பேச்சிலும் கண்ட கவிதை அழகு? அவனிடமிருந்து அவளுக்காக ஒரு கனிவான சொல் வந்தாலும் அதில் கனவின் அழகு மிளிர்ந்தது போல அவள் கண்களில் ஏறிய சுடர்?

*எஸ். லட்சுமி சுப்பிரமணியம்*

## நன்றிலே ஓசை.

www.thamizham.net - Free E Books No TM 14717

# இரத்தம் நிற்காது

ஹீமோபிலியா என்ற பயங்கர பரம்பரை நோய் இருக்கிறது. இந்நோய் கண்டவர்க்கு சிறு காயம் ஏற்பட்டாலும் இரத்தம் வந்து கொண்டே இருக்கும். உறையாது. இங்கிலாந்து அரசி விக்டோரியாவின் வழித் தோன்றல்களும், ஸ்பானிய மன்னர்களின் வழித் தோன்றல்களும், பரம்பரையாக இந்த இரத்தப் பெருக்கு நோய்க்கு அடிமையாக இருந்திருக்கிறார்கள்.

விழா முடிந்தது. மாலையின் இருள் பொட்டலமாய் இரவின் கருப்பிலும், வீட்டினுள் ஒளி வெள்ளத்திலும் கலந்து விட்டவேளை. வந்தவர்கள் எல்லாம் திரும்பிப் போய் விட்டார்கள். கடைசியாக விடை பெற்றுக் கொண்டவள் நளினு. தட்டு நிறையப் பூவும் பழமும் குங்குமமுமாய் வைத்து நடுவில் அந்தப் பட்டுப் புடைவையையும் வைத்து உட்கார்ந்தபடியே நளினுவை அருகில் அழைத்து அவள் கையில் கொடுத்தான் ராதை.

மைக்கோடு நன்னென ஒழுங்காக வளைந்த புருவங்கள் விரிந்தன. அந்த எழுச்சியின் மேல் மிகுந்த குங்கும நிறநெற்றிச் சுடர் வியர்வையில் கரைந்து முகத்தில் ஒரு புது ஒளி வீசிற்று.

"எதற்கு இதெல்லாம்?"
"நீ என் தங்கையைப் போல. .........இருக்கட்டும்".

ராதையின் குரல் நீரில் சிற்றலையைப் போல நடுங்கிற்று. பத்து நாட்களேயான, பிரசவத்தின் அயர்வுதீராத, பலவீனம் மட்டும் தானு அது? அவளை யறியாமல் சுந்தரத்தை அன்று முழுவதும் கவனித்த பொழுதுகளில், நெஞ்சில் எழும்பிய சிறு வேதனையின் எதிரொலி தான் அப்படி நடுங்கிற்று!

நளினு விடை பெற்றுக் கொண்டு துள்ளி ஓடிப் போய் காரில் ஏறிக் கொண்டாள். காரின் கதவுக்கு பின்னிருந்தே மணிக்குக் கையை ஆட்டிக் காட்டினுள். கண்ணுடிக் கதவின் மறு புறமிருந்து இரண்டு விண் சுடர்கள் கேலியாய் எட்டிப் பார்த்து சிமிட்டின. அந்த வாளிப்பு? இளமை பொங்கும் உடலின் புது மலர்ச்சி? ராதைக்கும் கூட மறுபடி மறுபடி பார்க்கத் தான் தோன்றியது. கண்ணைக்கட்டி நிறுத்திற்று அந்த இயல்பான எழில்.

வாசல் விளக்குகள் அணைந்து விட்டன. குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தாள். ராதை சற்றுத் தளர்வோடு எழுந்து வந்து தொட்டில் சங்கிலியைப் பிடித்துக் கொண்டாள். மெத்தென்ற தூக்கம் அதன் குவிந்த இதழ்களுள் அழுந்திக்கிடந்தது. தொட்டிலின் நலுங்களில் பூவுடல் லேசாய் அசைந்தது. பட்டுப் போட்டு மூடியது

www.thamizham.net - Free E Books No TM 14717

போல மென் குரல் முனு முனுப் பாய் மேலே மிதந்து வந்தது.

ராதையின் அருகே வந்து நின்று கொண்டான் சுந்தரம். அவன் பார் வை ராதைக்கும் குழந்தைக்கும் மாறி மாறித்துள்ளிற்று.

"குழந்தை அழகாக இல்லை? கொஞ்சம் நாள் போனால் தெரியும் உன் ஜாடையாக இருக்கிறதா என்று—"

அவன் உதட்டின் மேல் கையை வைத்து நிறுத்தினாள் ராதை. "ஒன்றும் சொல்லாதீர்கள். தூங்குகிற குழந்தையைப் பார்த்து மகிழக் கூடாது என்று பெரியவர்கள் சொல்லுவார்கள்".

அப்படியும் குழந்தையின் உடலை பரிவு துடிக்கும் விரல்களோடு தடவினான் சுந்தரம். ராதைக்குத் தடுக்க மனம் இல்லை.

"குழந்தை உன்னைப் போலத் தான் இருக்கும் என்று நளினா சொன்னாள்."

ராதையின் மகிழ்ச்சி சட்டென்று அடங்கிற்று. மென்மையான உணர்ச்சிகளின் அமைதியில் சிறுகல் விழுந்து அலைபரப்பிற்று. கலங்கிய பார்வையை மறைக்க முகம் தணிந்தாள்.

"என்னிடம் சொல்லவில்லையே"

"என்னிடம் சொன்னாள். இன்றைக்கு வைத்த பெயரும் கூட அவளும் நானும் பேசி முடிவு செய்தது தான்".

பெருமையில் அவன் குரலில் ஒரு புது உற்சாகம் வடிந்தது. அதை உணர்ந்ததுமே ராதையின் நெஞ்சு இன்னதெனப் புரியாத பொருமையில் சிக்குண்டு தவித்தது. சற்று அருகே வந்து அவன் தோள் மேல் இடிபட நின்று கொண்டாள். இரத்தம் இழந்து வெளுத்த மேனியும் ஒரு புது அழகாய்த்தான் இருந்தது வேம் மூச்சு வாங்கிற்று அந்தத் தளர்ச்சியில் நிறைந்த விழிகள் அவனைக் குற்றம் சாட்டும் விதமாய் பார்த்தன. சுந்தரம் ஜன்னலுக்குப் வெளியே தூரப் பார்வையாகப் பார்த்துக் கொண்டு நின்றான். அவள் புறம் திரும்பியும் பார்க்கவில்லை.

இது அவர்கள் வாழ்க்கையில் ஒரு

---

## இதுதான் நாகரீக அமெரிக்காவா

அமெரிக்காவில் அம்மா அப்பா யாரென்று தெரியாத 2,00,000 குழந்தைகள் வாழ்கின்றன. 18 வயதுக்கும் குறைந்தவர்கள் சுமார் 4 மில்லியன் பேர் விவாகரத்து செய்யப்பட்ட தாயுடனோ தந்தையுடனோ வாழ்கிறார்கள். விவாகரத்து செய்யப் பட்டு வாழ்கிறவர்கள் தொகை 15 மில்லியன். விவாகரத்து செய்கின்றவர்களில் பாதிபேர் 20வயதுக்கு குறைந்தவர்களே!

www.thamizham.net - Free E Books No TM 14717

* நண்பர்களை சந்திக்க முடியாது வெகு தூரத்தில் இருக்கும் போது தான் அவர்களைப் பற்றிய நினைவுகள் இன்பமயமாக இருக்கின்றன.

இடைவேளையா! அவள் மனம் லேசில் ஒப்ப மறுத்தது.

படம் வெளியாகி விட்டது. புதிதாக முக்கியமான பாத்திரம் ஏற்று நடித்திருந்த நளினுவுக்கு நிறைய பாராட்டுகள் கிடைத்தன. பத்திரிக்கைகள் புகழ்ந்து எழுதின. வழுவழுப்பான காகிதத்தில் அவள் வண்ணப் படம் விதம் விதமாக வெளியாயிற்று. அவள் பேச்சையும் சிறு அசைவையும் சிரிப்பையும் கட்டம் கட்டமாய் அமைத்துப் புன்னகை முகப் படத்துடன் பத்திரிக்கைகள் துணுக்கு வெளியிட்டன. சோப்பும், பவுடரும் குடும்ப சாதனங்களும் விற்கும் நிறுவனங்கள் அவள் படத்தை வெளியிட்டு தமக்கு விளம்பரத்தைத் தேடிக் கொண்டன

படம் ஓட ஓட, நாலைந்து படங்களுக்கு நளினுவுக்கு சேர்ந்தாற் போல அழைப்பு வந்து சேர்ந்தது. வெற்றியின் மகிழ்ச்சி வெறி கொஞ்சம் கொஞ்சமாக அவள் பேச்சிலும் பாவனைகளிலும் துடிப்பை ஏற்றியது. இன்னும் கொஞ்ச நாளைக்கு நளினுவின் சீசன்". என்று அவள் காது படப்பேசியது கேட்டதும் அவள் மனத்தில் மிகுந்த பெருமை நடையிலும் அங்க அசைவிலும் மெருகு காட்டிற்று.


அவள் புது நட்சத்திரம். புதிதாக திரை வானில் உயர்ந்த நட்சத்திரம் நிலைகுலைந்து தத்தளிக்காமல். வெண் திரையில் வெற்றி மேகத்தில் சவாரி செய்யும் நட்சத்திரம். திரும்பித் திரும்பி எங்கே பார்த்தாலும் அந்த


## அமிர்தாஞ்சன் இன்ஹேலர்




மூக்கடைப்பைப் போக்கும். தலைபாரத்தை நீக்கும். இதமான உடனடி நிவாரணம். கைவசம் ஒன்று இருக்கட்டும்—எந்த நேரமும் தேவைப்படலாம்.
அமிர்தாஞ்சன் இன்ஹேலர் கையடக்கமானது, உபயோகிக்க எளிதானது, சிக்கனமானது.

தயாரிப்பு:
அமிர்தாஞ்சன் லிமிடெட்,
சென்னை-4.

FDSAI 1012TM

www.thamizham.net - Free E Books No TM 14717

வெற்றி தான் புரிந்தது; அழுத்தமாக; அசைக்க முடியாததாக. பத்திரிக்கை விளம்பரங்களிலும் வண்ண சுவரொட்டிகளிலும். திரை உலக நிகழ்ச்சிகளை வருணிக்கும் கட்டுரைகளிலும், அந்த மங்காத மின்வெளிச்சம்தான் முதலில் நின்றது.

புதுப் புது விழாக்களில் நளினுவுக்கு அழைப்பு வரும். அந்த நேரங்களில் ஒரு துணையாய், அவள் பேச்சுக்கும் பழக்கத்துக்கும் ஒரு புதுப் பலமாய், அவளோடு இருக்க அவள் விழைவது சுந்தரத்தை தான். எந்த நிழற் படத்திலும் அவள் அருகே தெரிந்தது அவன் முகம் தான்.

"நீங்க கூட இருந்தாலே எனக்கு ஒரு புது தெம்பாக இருக்கிறது. உங்களிடம் கேட்டுக் கொண்டு தான் எதுவும் பேச வேணும் போலத் தோன்றுகிறது." என்பாள் நளினு உதட்டோரம் குழியும் புன்னகையில் அவன் கவனத்தைக் கவர்ந்த பெருமை ஒளிரும் விரல் அசைப்பில் பளீரிடும் மோதிரத்தின் வைரக் கல்லைப் போல, அந்தப் பார்வை ஒளிச் சுடர் பொளியும். குழையும் கனிவில் குரல் கொஞ்சும்.

சுந்தரத்துக்கு இது புது அநுபவமாகத்தான் இருந்தது. அவன் எண்ணங்களில் கடல் நீலமாய் அது அழகு காட்டிற்று. ஒவ்வொரு எண்ணமும் தனித்தனியாய் வியப்புடன் உயிர் பெற்று நின்றது. ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஞாபகமும் கற்பனையின் ஒளிப் பூச்சுப் பெற்று. அவன் எழுத்துக்களில் திகழ்ந்தன.

பகல் முழுவதும் அப்படிக் கழிந்து இரவில் வீடு திரும்பிய பிறகும் அந்த நினைவுகளே தொடரும். வீட்டில் கேட்கும் பேச்சிலும். கண்முன் தெரியும் காட்சிகளிலும் அந்த நினைவின் நிழலே தொடரும். மண்ணுள் மறைத்து விளையாடும் குச்சியெண, மனக்கண் எதிரே ஒரு செயல், செயல் நடுவே ஒரு சொல், சொற்களிடையே ஒரு சைகை. சைகை தெரியும். ஒரு புன்னகை, தோன்றிக் கொண்டே இருந்தது. அது மனநிலையை இன்பத் திகைப்பில் மயத்க் அவனை மருட்டிற்று. உடலின் உள் ளுணர்வில் ஊறும் அலைகளின் இரகசிய உவகை, எங்கே என்று கண்டு குறிப்பிட முடியாமல் பொங்கி அலையெழுந்து கொண்டிருந்தது.

முன்பெல்லாம் வீட்டுக்கு வந்தால் அவன் ராதையின் துணையைத் தான் தேடுவான். மணிப்பயலுடன் சிறிது நேரம் விளையாடா விட்டால் அவனுக்கு உடையைக் கழற்றி மாற்றிக் கொள்ளக் கூடத் தோன்றாது. சமையல் அறையிலேயே தட்டை வைத்துக் கொண்டு, தரையில் உட்கார்ந்து ராதையுடன் பேசிக் கொண்டே சோற்றை அலைந்து சாப்பிட்டால் தான் அவனுக்கு மன நிறைவாக இருக்கும். அதன் பின்னும் திறந்த வெளியில், நிலா முற்றத்தில், அவள் அருகே வந்து உட்கார்ந்து பேசிக் கொண்டே இருக்க, அந்த மென்மை இதயத்தைத் தாலாட்டுவது போலத் தான் அவன் கண்ணயர்வான். ராதையின் கை விரல்கள் அவன் தோள் மீதோ, மார்பிலோ பரிவாய் ஊன்றும். குரல் குழைய அவனை அழைத்து எழுப்புவாள். அப்புறம் தான் எழுந்து போய் அயர்ச்சி நீங்க, மெத்தையின் மென்மையை நாடிப் போவான்.

---

**எதிர் காலத்தினிடம் ஒரு குறை என்ன வென்றால் அதனை எதிர் பார்த்து தயார் செய்வதற்குள் அது வந்து விடுவது தான்**

**—அர்னால்டு**

---

இப்போழுது அவன் அந்த சுந்தரம் அல்ல. வாசலில் கேட்கும் காரின் சப்தம் அடங்கு முன். மாடிப் படியில் செருப்பொலி கேட்கிறது. அப்புறம் அறையில் மேசை விளக்கின் ஒளி வட்டமாய் குடை விரிக்கிறது. சில நாள் சாப்பிடவும் இறங்கி வருவதில்லை. வந்தாலும் இரண்டு நிமிடங்களில் அவசரமாக முடித்துக் கொண்டு ஓடிப் போய் விடுவான். அவன் வேலைகளை முடித்துக் கொண்டு மாடிக்கு வரும் வேளையில் அறைக் கதவு உட்புறம் தாழிடப் பட்டு இருக்கும். மும் முரமாக எழுதிக் கொண்டிருப்பதாக அவள் மூடிய கதவின் மறுபுறம்நின்று கற்பனை செய்து கொள்வாள். சில நாட்களில் அவன் அந்த விளக்கையும் கூட அணைக்க மறந்து அப்படியே நாற்காலியில் சரிந்து உறங்கி விடுவான். தூக்கம் சரியாக இல்லாதது கண்ணின் சிவப்பிலும் உடலின் குலைவிலும் காலையில் தெரியும்.

ஆவன் அவளைக் கோபிப்பதில்லை. வாய்தவறிக் கடிவதில்லை. ஆயினும் அவன் குடும்பத்தில் இழந்து விட்டசுவாரசியத்தை அவளால் உணராமல் இருக்க முடியவில்லை. அவனுடைய அன்பு, ஆர்வம் எல்லாவற்றையும் கவர்ந்து அவன் இருந்த நாட்கள் உண்டு. அதை அவன் அடைந்து தனக்கென்றே இருத்திக் கொள்வது எப்படி மறுபடியும்? போகப் போக விலகிக் கொனடே சொல்லும், அவள் நெருங்க நெருங்க எட்ட எட்டப் போகும் அந்தப் பழக்கம் தரும் ஊமை உறுத்தல் அவளால் தாங்கக் கூடியதாக இல்லை.

எழுத்தில் அவன் வெற்றியையும், தொடர்ந்து பெருகிய செல்வாக்கையும் பார்க்கையில், ஒரு பக்கம் பெருமிதம் பொங்கிற்று. ஆனால் ஓர் அச்சமும் அந்த உவகையைச் சூழ்ந்தது தன் வேதனை வெளியே தெரியாமல் அந்த நினைவு தரும் உள் ஒளியில் கூசியவளாய், தனக்குள்ளே சிந்தனையில் ஆழ்ந்திருப்பாள்.

இரவு நேரம். அவன் எழுதிக் கொண்டிருந்தான். மேஜை விளக்கின் வட்டத்தில் அவன் அகன்ற நெற்றி தெரிந்தது கொஞ்சம் கொஞ்சமாய் தலைமயிர் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. வழுக்கையும் கூடத் தோன்றி விட்டது. ஆனாலும் அவன் முகத்தில் இன்னும் முதுமை படரவில்லை. கரடி மயிர்ப் புருவமும் திராட்சைக்கண் களுமாக, அந்த முகம் இன்னும் எவ்வளவு அழகாகக் காண்கிறது? கையில் கொண்டு வந்த பாலை மேசை ஓரத்



''எங்கேனும் கொஞ்ச நேரம் என்னோடு கிளம்பி வாருங்கள்''

www.thamizham.net - Free E Books No TM 14717

தில் வைத்தாள் ராதை.

"பால் வைத்திருக்கிறேன்".

"ம்"

அவன் தலை நிமிரவில்லை. அவளை அவன் கவனிக்கவில்லை. ராதை போகாமல் அங்கேயே நின்ருள்.

"என்ன வேணும்?" முகம் நிமிராமலே கேட்டான்.

'கொஞ்சம் உங்கள் வேலையைக் குறைத்துக் கொள்ளக் கூடாதா?"

பதிலுக்கு அவன் புருவங்கள் வியப்பில் உயர்ந்து நெறிந்தன. "பகல் முழுவதும் வெளியே போய் விடுகிறீர்கள். இரவு வந்தாலும் எதோ எழுதிக் கொண்டே இருக்கிறீர்கள். இவ்வளவு வேலையை ஏன் இழுத்து விட்டுக் கொண்டீர்கள்? உங்கள் கண்ணுக்குப் புதிதாகப் பிறந்த நம் குழந்தை தெரிகிறதா? உங்கள் மனைவி ராதை தெரிகிருளா? நீங்கள்



## கடல் நீரை குடிநீராக்கும் கப்பல்

**கடல் நீரை கொதிக்க வைத்து அது ஆவியாகும் போது உப்பு அடியில் தங்குகிறது. பிறகு இந்த ஆவியை குளிர வைத்து சுத்தமான நீராக்கின்றது ஒரு பிரிட்டிஷ் கம்பெனி எங்கு? எல்லாம் இவ்வி இயந்திரங்கள் பொறுத்தப் பட்டுள்ள ஒரு கப்பலுக்குள் தான் கடலருகில் உள்ள எந்தப் பகுதியில் நல்ல நீர் பஞ்சம் ஏற்பட்டாலும், இது அங்கு நங்கூரம் பாய்ச்சி இவ்வாறு ஆயிரக்கணக்கான காலன் நல்ல நீரை வழங்குகிறதாம்.**

கொஞ்சி விளையாடும் குழந்தை மணி தெரிகிருனு?"

"ரொம்பவேலை" அவன் குரல் தாழ்ச்சந்து. 'மன்னித்துவிடு ராதை எனக்கு நேரம் இல்லை."

அவள் மண்டியிட்டு அவன் காலடியில் உட்கார்ந்து கொண்டாள். தன் கன்னத்தை அவன் மடியில் வைத்துக் கொண்டாள். அவள் கேள்விகள் அவனை இன்னும் நச்சரித்துக் கொண்டிருந்தன. அதில் அவள் தங்கி, அந்தக் கொக்கிகளின் விளம்பலோடு அவனை இன்னும் சூழந்துக் கொண்டிருந்தாள். அவள் கையை எடுத்துத்தன் கைகளுள் பொத்திக் கொண்டான்; அவள் துயரத்தின் முறிக்கு தளர்ந்தது லேசாய் ஒரு விசிப்பு கேட்டது.

"வேலை செய்தால் சம்பாதிக்க முடியும்? பெயர் இருக்கும் போது தானே வேலைகள் கிடைக்கும்?" அவன் குரல் கம்மிற்ரு? அல்லது இருளின் ஏமாற்றலா? அந்தப்

"இன்று நீங்கள் எனக்காகக் கிளம்பியே ஆக வேண்டும்"

www.thamizham.net - Free E Books No TM 14717

**பொழுது போக்குக்காக சற்று நேரம் ஒதுக்க முடியாதவர்கள், சீக்கிரமே உடல் நலமின்மைக்காக நேரம் ஒதுக்க வேண்டியிருக்கும்**

—ஜான் வானமேக்கர்

பேச்சு இன்னும் அவளிட மிருந்து எட்டியே தான் இருந்தது. அவன் பழைய சுந்தரம் அல்ல; உணர்ச்சிகளால் அவள் இதயத்தைத் தொட்டு விடுவதற்கு.

“யாருக்கு வேணும் இந்த சம்பாத்தியம்? எவ்வளவு படிகள் மேலே வந்திருக்கிறீர்கள் நீங்கள்? ஆனால் ஒவ்வொரு படியும் உங்களை உயர்த்தவில்லை. உங்கள் லட்சியங்கள், உன்னதமான கற்பனைக் கொள்கைகள் எல்லாவற்றிலும் இருந்து விலக்கித் தான் உங்களை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறது. நீங்கள் அன்போடு ஆதரவோடு குரல்களில் அழைத்துச் சேர்த்துக் கொண்டவர்கள், உங்கள் மனைவியும் குழந்தைகளும், உங்களுக்கு அன்னியர் ஆகிவிட்டார்கள். அவர்களைத் திரும்பிப் பார்க்க உங்களுக்குப் பொழுது இல்லை”.

அவள் குரல் கண்ணாடி நொறுங்குவது போல இருந்தது. அவள் வேதனை அவனுக்குப் புரிந்தது. ஆனால் அதைப் பங்கிட்டுக் கொள்ள அவனுக்குப் பொறுமை இல்லை அங்கிருந்து அவள் எழுந்து போய் விடுவதையே அவன் விரும்பினான். ஏனென்று புரியாமல் அவனுக்கு அவள் மீது திடீரென்று வெறுப்பு தட்டிற்று.

ராதை எழுந்து நின்று கொண்டாள்.

“கொஞ்சம் மூடி வையுங்கள் உங்கள் எழுத்து வேலையை இன்றைக்கு எழுதியது போதும். வாருங்கள் காரை எடுத்துக் கொண்டு வெளியே போய் விட்டு வரலாம். மணி ஒன்பது கூட ஆகவில்லை. எங்கேனும் கொஞ்ச நேரம் என்னோடு கிளம்பி வாருங்கள்” அவள் கண்கள் நிறைந்தன. ஆயினும் அது அவன் நெஞ்சில் அனுதாபத்தைத் தூண்டவில்லை.

## நீண்ட நாள் வாழ ‘ரோஜா’ உதவும்

**ரோஜா மலரின் நறுமண முகர்ச்சி மனித வாழ் நாளை கூட்ட உதவும் என்கிறார் ஜெர்மன் தாவர ஆராய்ச்சியாளர் ஜெரமியாஸ். எடுத்துக் காட்டாக 91வயதில் காலமான ஜெர்மன் தலைவர் கோன்ராட், பெரும் ரோஜா பிரியராக இருந்ததை சுட்டிக் காட்டுகிறார். மணம் நிறைந்த ஒரு கொத்து ரோஜா மனித ரத்த ஓட்டத்தை செம்மைப் படுத்துவதுடன் காதல் வேட்கையைத் தூண்ட வல்லது என்கிறார் இவர்.**

www.thamizham.net - Free E Books No TM 14717

"இது முக்கியமான வேலை. நாளைக்கு ஸெட்டுக்கு இதை கொடுத்தாக வேண்டும். என்னால் எங்கேயும் இப்போது வரமுடியாது. நீ வேணுமானால் போய்விட்டு வா"

"இன்று எந்த வேலையும் முக்கியமானது இல்லை. என்னை எவ்வளவு தூரம் நீங்கள் பொருட்படுத்துகிறீர்கள் என்பதற்கு இது ஒரு சோதனை. இன்று நீங்கள் எனக்காகக் கிளம்பியே ஆக வேண்டும்." அவள் மூச்சு அவனை எரிப்பது போல இருந்தது. அவள் விழிகளில் மங்கிய தழல் பிழம்பிற்று. விடுவிடென்று முன்னால் வந்து அவன் எழுதிக் கொண்டிருந்த காகிதங்களை மூடினாள். மேஜை விளக்கைச் சட்டென்று அணைத்தாள்.

அவனுக்குச் சட்டென்று கோபம் தலைக்கேறிற்று. அது வரை அவன் அவளைக் கடிந்ததில்லை. கோபித்து ஒரு சொல் சொன்னதில்லை. அன்று அவன் பொறுமை கரையுடைந்து பொங்கிற்று. சீற்றத்தோடு கையை ஓங்கி வீசினான். இருளில் அவன் கை அவள் கன்னத்தில் விழுந்தது தான் தெரியும். அவள் வாயிலிருந்து எழுந்த அழுகை படி இறங்கிப் போய்க் கொண்டிருந்த அவன் காதுகளில் மங்கிய ஒலியாகத்தான் கேட்டது. வெகு நேரம் அவன் அறைக்குத் திரும்பவில்லை.

அவன் திரும்பி வந்த போது அவள் படுத்துக் கொண்டு விட்டாள். தூங்கி இருப்பாளென்றே அவன் நினைத்தான். அவளை எழுப்ப மனம் இல்லை. ஆயினும் மனத்தில் அந்த வேதனை வண்டலாய் உறுத்திற்று. அருகருகே படுத்துக் கொண்டிருந்தாலும், அவர்கள் இருவருக்கும் இடையே ஒரு மோனம் விரிந்து அதன் கரைகள் அகன்றன, இருளில், தெரியாத பார்வையில் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் படுத்துக் கொண்டிருந்தார்கள்.

சட்டென்று நகர்ந்து அவள் நெருங்கினாள். அவள் வளைக்கை அவன் மார்பின் மீது தங்கிற்று.

"உண்மையைச் சொல்லுங்கள், உங்கள் மனத்தில் இருப்பது எனக்கு தெரியும். உங்களைப் போன்ற ஒரு ஆண் மகன் இப்படித் தவிப்பது எப்போது என்று எனக்குத் தெரியும். உங்கள் பொறுமை இன்மைக்குக் காரணம் வேலையின் கடுமை இல்லை. அது மட்டும் இல்லை. நிச்சயமாக."

அவன் பதில் சொல்லவில்லை. அவன் மனச்சாட்சியே உருவம் எடுத்து அவன் முன் நின்றது போல இருந்தது. விரலைச் சுட்டிக் கேள்வி கேட்பது போல இருந்தது. இரு வரிடையே இனி திரை ஏதும் இருக்க முடியாது.

"நீங்கள் சொல்ல மாட்டீர்கள். சொல்லவும் வேண்டாம். அவள் யாரென்று நீங்கள் சொல்லித்தான் நான் தெரிந்து கொள்ள வேண்டுமா?"

அவன் மறுக்கவில்லை.

(வளரும்)

---

## * புது மிருகம் : நரிநாய் !

ஜெர்மனியில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தில் "பூடில்" எனப்படும் நாயையும், ஓநாயையும் இணைத்து புதுவகை "நாயை" உருவாக்கி இருக்கிறார்கள். இப்படிப் பிறந்தவை உடல் அமைப்பில் நாயையும், மூளை அமைப்பில் ஓநாயையும் ஒத்திருக்கின்றன. இதே போல் பெண் நரியையும் பூடில் நாயையும் இணைத்து நரி நாய்களை உருவாக்குகிறார்கள்.

www.thamizham.net - Free E Books No TM 14717

# மாண்புள்ள மனிதர் மகாலிங்கம்

அமைதிக்கு ஒரு நிறம் உண்டானால் அது வெண்மையாக இருக்க வேண்டுமென்பது போல. கண்ணை அள்ளும் வெள்ளை நிற வேட்டி வெள்ளை ஜிப்பா. மென்மையாக, வெண் பற்களின் நுனி தெரியும் புன்னகை இவற்றுடன் எங்களை உபசரித்தார் திரு. என். மகாலிங்கம் எளிமையான தோற்றத்தில் ஆடம்பர சுபாவங்கள் ஏதுமின்றி பழகும் இந்த மனிதரா இவ்வளவு பெரிய தொழில் நிறுவனங்களின் இயக்குனர் என்று எங்களால் நம்ப முடியவில்லை.

சந்தித்த தொழிலதிபர்களிடமிருந்தெல்லாம் ஒரு வேறுபட்ட பழக்கம் இவருக்கு உண்டானால் அது அவரது ஆடம்பரமற்ற அமைதியான ஆனால் தெளிவான பேச்சு என்று தான் கூற வேண்டும். தென்னிந்திய தொழில் உலகில் முன்னணியில் இருக்கும் இந்த மாமேதை முதலில் தனது கல்லூரி நாட்களை இன்பமாக நினைவு கூர்ந்தார்.



“1938 முதல் 42 வரை சென்னை லயோலா கல்லூரியில் படித்தேன். நான் படிக்கும் போது பி. எஸ் ஸி யில் பௌதீகம், ஆங்கிலம் மற்றும் பிற பாடங்களும் இருந்தன. அப்போது பாதர் மெர்பி அவர்கள் தான் எங்களுக்கு பிரின்ஸ்பலாக இருந்தார். அப்போதெல்லாம் அதிக டெஸ்டுகள் வைக்க மாட்டார்கள்.”

[“இப்போதெல்லாம் இங்கு வாரத்தில் இரண்டு டெஸ்டுகள் கூட வைத்து உயிரை எடுக்கிறார்களே” என்று இலயோலா மாணவர் நினைத்துக் கொண்டார்.] “நான் பி.எஸ்ஸிக்கு மேல் படிக்க முடியவில்லை. காரணம் என் தந்தையின் வியாபாரத்தை நான் கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. நாங்களும் ஸ்டிரைக்குகள் எல்லாம் பண்ணியிருக்கிறோம். ஆனால் ஆசிரியர்களுக்கெல்லாம் அதிக மரியாதை வைத்திருந்தோம். அப்போதெல்லாம் பொது அறிவு சற்று அதிகமாக இருந்தது. பாடத்தை விட்டு சற்று அதிகமாக வெளியே படிக்கும் பழக்கம் இப்போது குறைந்து விட்டது. உதாரணமாக லேசரை’ப் பற்றி வெறும் பௌதீக புத்தகத்தில் படிப்பதோடு நிறுத்தி விடக்கூடாது. நூலகத்தில் வேறு புத்தகங்களையும் படித்து தெரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய பொது அறிவு குறைந்ததற்குக் காரணம், இப்போதெல்லாம் கவனம் பல்வேறு வழிகளில்

www.thamizham.net - Free E Books No TM 14717

சிதறி விடுவதுதான் என்று வருந்தினார்.

"தற்போது கல்லூரிகளில் தேர்ந்தெடுக்கப்படும் முறையில் ஏதாவது மாற்றம் தேவையா?" என்று கேட்டோம்.

"ஆம் திறமைக்கு இப்போதெல்லாம் அதிகமாக மதிப்பில்லை மருத்துவ பொறியியல் வகுப்புக்ளுக்கு " ராணுவ முறையில் " தேர்வுகள் வைக்கலாம். திறமையின் அடிப்யில் போட்டி முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அமெரிக்க முறை இவ்விதத்தில் கையாளப்படுவது நல்லது. மற்றொன்று தேவையான அளவுக்கு அதிகமாக பொறியியல் கற்றவர்கள் ஆகி விடுகிறார்கள் என்று நாம் வருந்த வேண்டாம் ஏனெனில் நமது அண்டை நாடுகளில் மிகஅதிகமாக அந்தத் தேவை இருக்கிறது. இந்நிலையில் நமது இன்சீனியர்களோ, மருத்துவர்களோ வெளிநாடுகளுக்கு சென்று பணியாற்ற வசதி செய்யலாமே"

"அரசியல் சாக்கடையில் மாணவர்கள் இப்போதெல்லாம் அதிகமாக விழுகிறார்கள் என்று வருந்துகிறோம் என்ன நினைக்கிறீர்கள்?'

" உண்மை! உள்ளூர் அரசியலால் மாணவர்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். அதுவுமில்லாமல் நாட்டுப்புற பகுதியில் உள்ள கல்லூரிகளில் இருக்கும் மாணவர்கள் கூட அரசியலால் கவரப்படுகிறார்கள்

இதற்குக் காரணம் வேகமாக உள்ள செய்தி சாதனங்கள்"

"கல்வித் துறையில் ஏதாவது முன்னேற்றம் இருக்கிறதா?

"முன்பெல்லாம் தாலுக்காவிற்கு ஒரு ஹைஸ்கூல் இருக்கும். எனவே அதிகமாக செலவழிச்சு வெளியே வந்து பலர் படிக்க வேண்டியிருக்கும். இப்போதெல்லாம் மிக அதிகமான பள்ளிகள் இடத்துக்கு இடம் வந்து விட்டன பள்ளிகள் இல்லாத ஊரே இல்லை!"

"உங்கள் கல்லூரி வாழ்வில் மறக்க முடியாத நினைவுகள் தேங்கி நிற்பவை ஏதாவது சொல்ல முடியுமா?"

சற்று நேர சிந்தனைக்குப் பின்......

" கல்லூரி ஆங்கிலத் துறையில் கே. சுப்பிரமணியம் என்ற ஆசியர் இருந்தார். அவர் என்னை மிகவும் கவர்ந்தவர். ஒவ்வொரு மாணவனையும் தனிப்பட்ட முறையில் அவருக்கு தெரிந்திருக்கும். பெயர் சொல்லி சரியாக அழைப்பார். அவர் ஒரு தேசியவாதி இன்று வரை என் நினைவுகளில் நீங்காதிருப்பவர் இவர்"

காங்கிரஸ் கட்சியின் மிகப்பெரிய மனிதர் மாகலிங்கம் 1957ம் ஆண்டு தனது வாழ்வில் மறக்க முடியாத ஆண்டு என்று கூறினார் தாத்தாவின் காலத்திலிருந்தே அரசியலில் ஆர்வம் காட்டிவந்த குடும்பம் இவரது. உழைப்பால், சீரியசிந்தனையால். தென்னாட்டின் தலைசிறந்த தொழில் மேதைகளில் ஒருவராய்

## கல்லூரியில் சேர தாடி வளருங்கள்!

**பஞ்சாப்பிலுள்ள காள்சா கல்லூரியில் ஒரு விசித்திரமான சட்டம் அமுலில் இருக்கிறது. அந்த சட்டப்படி, தாடி வளர்க்காத எந்த ஒரு மாணவனுக்கும் அந்தக்கல்லூரியில் சேர்ந்து படிக்க அனுமதி அளிக்க மாட்டார்கள் காரணம் இந்தக் கல்லூரி சீக்கிய மதத்தை சேர்ந்தவர்களால் நடத்தப்படுகிறது.**

தகவல் : எஸ். எஸ். மணி
திருவனந்தபுரம்

www.thamizham.net - Free E Books No TM 14717

உயர்ந்துள்ள இந்த மாபெரும் மனிதர் மாகலிங்கம் சில பெரிய தொழில் நிறுவனங்களில் உரிமையாளர். இவரது போக்குவரத்து நிறுவனத்தில் 120 உந்து வண்டிகளும் 60 லாரிகளும் ஓடுகின்றன. மிகச் சிறந்த முறைல் இவை இயக்கப் படுகின்றன. இவரது ஊரான பொள்ளாச்சியில் உயர்ந்து நிற்கும் மகாலிங்கம் கல்லூரியும் பாலிடெக்னிக் கல்லூரியும் இவர் கல்வித் துறையில் காட்டும் ஆர்வத்திற்கு சான்ருக நிற்கின்றன. தொழிலில், கல்வியில் மட்டுமின்றி, ஒழுக்கத்திலும், ஈடுபாடு காட்டும் நல்ல மனிதர் திரு. மகாலிங்கம். காந்தியத்தில் மிகத் தீவிரமான நம்பிக்கை கொண்டவர்; வள்ளலாரிடம் இவருக்கு ஆழ்ந்த பக்தி உண்டு.

"தற்போது இலவசக் கல்லூரி வகுப்புகள் கொண்டு வந்திருக்கிறீர்களே அது பற்றி......"

"உயர் கல்வி இலவசமாக கொணர்வது முடியாதது. கல்லூரிப் படிப்பின் அருமையை உணர்ந்து படிக்க வேண்டும் மாணவர்கள். இலவசமாக்கப்பட்டால் தரம் மிகவும் குறைந்து விடும். இலவசமாக்கிவிட்டால் அனைவருக்கும் இடம் கல்லூரிகளில் கொடுக்கும் நிலையிலும் தற்போது நம் நிலைமை இல்லையே. காந்தியடிகள்கூட 8வயது முதல் 14 வயது வரை தான் இலவசப் படிப்பு கொண்டு வர வேண்டுமென்று சொன்னார்."

"தண்ணீர் பிரச்சினையை சமாளிக்க உங்களது யோசனை என்ன?" என்று கடைசியாகக் கேட்டோம்.

இந்த பிரச்சினையை நன்கு ஆய்ந்து அளித்த கருத்துக்களை இவர் புத்தக வடிவில் வெளியிட்டிருக்கிறார். அதனை எங்களுக்கு அளித்துவிட்டு சுருக்கமாகச் சொன்னார்:

"பருவ மழை பெய்யாததால் கடந்த மூன்று ஆண்டுகளாகவே தண்ணீர் பஞ்சத்தால் நாம் அவதியுறுகிறோம். மாநிலங்களுக்குள் ஒற்றுமை இருந்தால் இதனை எளிதில் சமாளிக்கலாம். கோதாவரி நீரை அவ்வப்பொழுதெனும் நாம் பயன் படுத்தலாம். கடலுக்குச் செல்லும் கோதாவரி நீரினை பயன் படுத்தினால் எத்தனை இடங்களில் வறட்சியைத் தடுக்கலாம்" என்றார்.

அமைதியான பேச்சும், மென்மையான புன்னகையும் சீரிய ஒழுக்கமும் கொண்ட இந்த மனிதரைச் சந்தித்துப் பேசிய நிமிடங்கள் அரைமணிக்கும் குறைவாக இருந்த போதிலும், மனதளவில் எத்தனையோ ஆண்டுகள் மறக்க முடியாத மனிதராக இவரது சந்திப்பு அமைந்தது என்று பெருமிதமடைந்தோம்!

பேட்டி: ஆசிரியர் குழு

பதிப்பாளரும் ஆசிரியரும்: சு. இராசேந்திரன், எம்.ஏ.. 19, நெளரோசி வீதி சென்னை.31. அச்சிடுபவர்: பி.வி. ராமச்சந்திரன், ஸ்ரீ பண்டாரி பிரஸ் 26, பிராட்வே, சென்னை-1.

www.thamizham.net - Free E Books No TM 14717

*THE ONLY*

SYNTHETIC GEM FACTORY

In the whole of Asia.

# THE INDO-SWISS SYNTHETIC GEM MANUFACTURING COMPANY Limited

11/326 Main Road, Mettupalayam
Coimbatore District

Grams :
INDO-SWISS.

Phone :
Office : 136
Factory : 127

## Sole Distributors :

*G. S. AND COMPANY*

6, Jaffersha Street, TRICHY-8

AND

RASTHA GOPALJI

JIAPUR

www.thamizham.net - Free E Books No TM 14717

VGP

இந்தியாவிலேயே
மிக அதிகமான ரேடியோக்கள்
விற்பனை செய்பவர்கள்



**murphy**

*Delights the home!*

**V. G. பன்னீர்தாஸ் & கோ.**

சைதாப் பேட்டை சென்னை-15.

போன் : 442333—442334

கிளை :

தி. நகர் சென்னை-17.

போன் : 440246

www.thamizham.net - Free E Books No TM 14717